பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 26 வியாழக்கிழமை (12.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 351

# துறைமுக, பெற்றோலிய, மின்சார சேவைகளில் ஊழியர் சட்டப்படி வேலை!

## 5,000 ரூபா உயர்வு கோரி அரசுக்கு எதிராகப் போர்க்கொடி

கொழும்பு, நவ.12

நாடுமுழுவதிலும் மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், துறைமுக அதிகாரசபை உள்ளிட்ட முக்கிய அரச துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வு கோரி நேற்று முதல் மூன்று நாள்களுக்கு சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் குதித்திருக்கின்றன.

பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அரச ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்திருக்கின்றமையால் முக்கிய சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன. இதனால் அரசு பல நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது.

5ஆயிரம் ரூபாவால் ஊதியத்தை அதிகரிக்குமாறு கோரியே தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளன.

தொழிற்சங்கங்களின் இந்தப் போராட்டம் காரணமாக எரிபொருள் விநியோகமும், இலங்கைத் துறைமுகத்தின் நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொலன்னவை எரிபொருள் களஞ்சியத்திலிருந்து எரிபொருள்களை விநியோகம் செய்யும் பணி பாதிப்படைந்துள்ளது. முத்துராஜவெலவிலும் இதே நிலை காணப்பட்டது.

துறைமுகத்தில் பொருள்களை ஏற்றி இறக்கும் நடவடிக்கைகள் மெதுவாகவே இடம்பெற்றன. மேலதிக நேர வேலைக்கு ஊழியர்கள் எவரும் செல்லவில்லை. இதனால் துறைமுக அதிகார சபைக்கு பல லட்சக்கணக்கான ரூபா பணம் நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நாடு முழுவதிலுமுள்ள துறைமுகங்களில் மொத்தமாக சுமார் 13 ஆயிரம் பணியாளர்கள் இருக்கின்றனர். கொழும்புத் துறைமுகத்தில் மாத்திரம் 9 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவருமே சட்டப்படி வேலை நிறுத்தத்தில் குதித்தமையால், துறைமுகப் பணிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர்களும் இப் (20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம்-II உயிரியல்- I பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும்-I,II,III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## அத்தியாவசிய சேவைகளை வழங்க இராணுவத்தினர் தயார் நிலையில்

### சட்டப்படி வேலையால் மக்களுக்குப் பாதிப்பு வராதாம்

கொழும்பு,நவ. 12

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளைத் தங்குதடையின்றி எந்தநேரமும் பெற்றுக்கொடுப்பதற்கு பாதுகாப்புப் படையினர் பரிபூரண தயார் நிலையில் எப்போதும் உள்ளனர். எனவே தொழிற்சங்கப் போராட்டத்தால் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறுகள் ஏற்படும் என்று பொதுமக்கள் அஞ்சத் தேவையில்லை-என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்துத் தெரிவித்தவை வருமாறு:-

தொழிற்சங்கங்களின் போராட்ட நடவடிக்கைகளால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்புப் படையினர் அத்தியாவசிய சேவைகளை எந்த நேரமும் பொதுமக்களுக்கு வழங்கிக் கொண்டே இருப்பார்கள். பாதுகாப்புப் படையினர் இதற்காகப் பரிபூரண தயார் நிலையில் உள்ளனர்.

எனவே, அத்தியாவசிய சேவைகளைப் பொதுமக்கள் தங்குதடையின்றிப் பெற்றுக்கொள்வதில் சிறு தடங்கல் கூட ஏற்படமாட்டாது - என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இப்போராட்ட நடவடிக்கைகளால் எந்தவொரு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் பொன்சேகா ராஜினாமாக் கடிதம் வழங்கினால்...

## ...துரிதமாகப் பதில் வழங்கத் தயாராகிறார் ஜனாதிபதி!



கொழும்பு, நவ.12

கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா தமது பதவியை ராஜினாமாச் செய்யும் கடிதத்தைச் சமர்ப்பித்தால், அதற்கான பதில் துரிதமாக வழங்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மூத்த அமைச்சர்கள் சிலருடன் கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறாராம்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா போட்டியிடுவது குறித்து செய்திகள் வெளிவரத் தொடங்கியதிலிருந்து பல்வேறு வகையான ஊகங்கள், சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இத்தகைய தருணத்தில் -

ஜெனரல் சரத் பொன்சேகா ராஜினாமாக் கடிதத்தை வழங்கினால் பதிலைத் துரிதமாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உயர் அதிகாரிகளுக்குத் தாம் அறிவுறுத்தி உள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார் என்ற தகவல் தென்னிலங்கையில் பெரும் பரபரப்புடன் பேசப்படுகிறது. (அ)



## மேல் மாகாணத்தில் ஒட்டப்பட்டிருந்த பொன்சேகாவின் படங்கள் கிழிப்பு!

கொழும்பு, நவ.12

மேல்மாகாண வீதிகளில் ஒட்டப்பட்டிருந்த பாதுகாப்புத் தலைமை அதிகாரி சரத் பொன்சேகாவின் படங்கள் இனம் தெரியாத நபர்களினால் நேற்று மாலை அகற்றப்பட்டுள்ளன.

அரசின் உத்தரவிற்கு அமைவாக இவை அகற்றப்பட்டன (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவர் மோதல்; பத்துப் பேர் படுகாயம்

கொழும்பு நவ 12

கொழும்பு ஐயவர்த்தனபுர பல்கலைக் கழக உள்வாரி மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலை அடுத்து அப் பல்கலைக் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு வழங்கிய யுத்தக் கப்பல்கள் திரும்பக் கிடைக்குமா? தடுமாறுகிறது இந்தியா!

கொழும்பு, நவ. 12

இலங்கைக் கடற்படைக்குக் குத்தகைக்கு வழங்கிய இரு யுத்தக் கப்பல்களும் மீண்டும் கிடைக்குமா என்பது தெரியாத நிலையில் இந்தியா உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்த இரு கப்பல்களுக்காக இலங்கையுடன் முரண்படுவதற்குப் புதுடில்லி தயாரில்லை என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கைக் கடற்படைக்கு 2007 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கிய யுத்தக் கப்பல்களை மீளப் பெறுவது குறித்து இந்தியா நிச்சயமற்ற நிலையில் உள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நெல்லியடியில்...

வடமராட்சி வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் செய்தியாளர்களின் நன்மைகருதி உதயன் உப பணிமனை 14.11.2009 முதல் பிரதான வீதி, நெல்லியடி (மக்கள் வங்கி முன்பாக) எனும் முகவரியில் திறந்துவைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## வீரகத்தி சின்னத்துரை

சூராவத்தை, ஏழாலை தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி சின்னத்துரை 09.11.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி- வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மநாதன் (கனடா), கமலாதேவி (நோர்வே), காலஞ் சென்ற வசந்தாதேவி ஆகியோரது அன்புத் தந்தையும், கோமதி (கனடா), வரதராசா (நோர்வே) ஆகியோரது பாசமிகு மாமனாரும், சிந்துஜா, சிவானுஜா, ரிஜிதா, நிசாகரன், ஜெயகரன், வேணுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகேஸ்வரி வாசா,*
*சூராவத்தை,*
*ஏழாலை தெற்கு, சுன்னாகம்.* (90896)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## வேலுப்பிள்ளை கணேசன் (இராசு)

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், காணி அபிவிருத்தி இலாகா)



சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மேற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணேசன் (10.11.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேலுப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, வல்லிபுரம், மற்றும் இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வரத்தினம் (தினேஸ் வெதுப்பகம், திருநெல்வேலி கிளை), இராசேந்திரம் (சுந்தர்சன் எலக்ரிக்கல்ஸ், மானிப்பாய்), குமாரசாமி ஆகியோரின் அன்பு மாமனும், தக்ஷாயினி (சித்த மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக் கழகம், கைதடி, 3ஆம் வருட மாணவி), பிறேமி (கனடா), சதீஸ் (செலிங்கோ ஆயுள் பகுதி ஊழியர்), சனந்தன் (U.K), மதுஷாயினி ஆகியோரின் பாசமிகு பேரனும், றம்மியா வின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் சுதுமலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை மேற்கு,*
*மானிப்பாய்.*
T.P. 0775084310 (90878)

தகவல்:
இராஜேஸ்வரி (வேவி),
ஜெகதீஸ்வரி (வவி)
பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 • 03 • 1932



மறைவு
24 • 10 • 2008

அமரர்

## சோமசுந்தரம் கணேசலிங்கம்

**B.A., Dip. in Edu., M.A.**

(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

திதி: அபரபக்க ஏகாதசி [12.11.2009]

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

நாள் ஒன்று விழந்ததில்லை
நாம் நினைத்துக் கலங்காமல்
ஆண்டு ஒன்று ஆயிடினும்
ஆறிடுமோ எம் துயரம்....

"சிவகிரி",
மீசாலை வடக்கு, மீசாலை. (90719)

குடும்பத்தினர்.
16/1, [illegible]

# தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், நவ. 12

ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க. மகளிர் வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி எலிசபெத்தம்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக மாணவர் அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் குயின்ரனும், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் சிவயோகம் தயாபரனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கலை இலக்கிய நிகழ்வுகளும் இடம்பெறும்.

(04-10)

# மீள்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 12

வலி.வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் 14 ஆம் திகதி சனிக்கிழமை 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

1990 ஆம் ஆண்டில் இருந்து மயிலிட்டி - கட்டுவன் வீதி, கட்டுவன் - வசாவிளான் வீதி, பலாலி - யாழ்ப்பாண வீதி, மயிலிட்டி - பலாலி டச்சு வீதி உள்ளடங்கலான பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் மீளக்குடியமர்தல் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04-10)

# நாவற்குழி பொது நூலகத்தில் நடைபெறும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 12

சாவகச்சேரி பிரதேசசபையும், நாவற்குழி பொது நூலக ஆலோசனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நாவற்குழி பொது நூலகத்தில் சாவகச்சேரிப் பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், ஈ.பி.டி.பி கட்சியின் சாவகச்சேரிப் பொறுப்பாளர் சுஸ் அலெக்சாண்டர், நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம், கைதடி நாவற்குழி அ.த.க. பாட சாலை அதிபர் எஸ். சோமசுந்தரம், கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலய அதிபர் திருமதி செ.முத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(204)

# மரண அறிவித்தல்கள்



## ஆறுமுகம் கனகலிங்கம்

(பிரபல புகையிலை வியாபாரி)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகலிங்கம் (08.11.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கமுத்து மற்றும் சின்னம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி (இந்தியா), கலாவதி, ஜெயவதி (ஆசிரியை, கொக்குவில் இ.ஆ.பாடசாலை), தயாவதி, சிவபதி, தயானந்தன் (கனடா), பிறேமாவதி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), Dr.லிங்கநாதன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தம் (இந்தியா), தவயோகராஜா (துளசிகா ஸ்ரோர்ஸ், நாச்சிமார் கோவிலடி), வரதராஜா, விஜேந்திரன் (கொழும்பு), ஜெயக்குமார், இராஜயோகம் (கனடா), ஜெயக்காந்தன் (முகாமையாளர்- கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்க கிளை) நளாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஸ்வலிங்கம், முத்துத்தம்பி, நடராசா, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, திருநாவுக்கரசு, சின்னமணி, காலஞ்சென்ற செல்லமுத்து, முத்துவேலு, மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனரும், நிமலன், தனுஜா (ஆசிரியை,கொக்குவில் இ.கல்லூரி), சுகந்தன் (capital Alliance), மேனகாந், துளசிகா, கங்கா, ரேணுகா, கோபிகா (கொ.இ.கல்லூரி மாணவிகள்), தாரகா, நிறோஜன், நிலா, துஷாந் (கனடா), கஸ்தூரி, லக்ஷ்மன் (லண்டன்), துஷ்யந்தன், துஷாரகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 4 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.48, பெரியதம்பிரான் வீதி,*
*வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.*

தகவல்
குடும்பத்தினர்.

## நல்லையா தேவானந்தன்



மண்டைதீவு தெற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தன் பிள்ளையார் கோயிலடி, புளியங்கூடல் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தேவானந்தன் (சின்ராசா) நேற்றுமுன்தினம்(10.11.2009) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் நல்லையா-திலகவதி (இந்தியா) தம்பதியினரின் அன்பு மகனும். காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காந்தரூபியின் அன்புக் கணவரும், ஜனார்த்தகி, தாரணி, மிதுனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவானந்தன் (இந்தியா) காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் சத்தியானந்தன் (இந்தியா), சற்குணானந்தன் (கனடா), சதானந்தன் (கனடா), காலஞ்சென்ற புஸ்பானந்தன் மற்றும் சந்திரவதனா, காலஞ்சென்ற கேதாரவதனா, மற்றும் மதிவதனா, தவவதனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சரஸ்வதி, (லோசா-கனடா) மற்றும் விஜிதா, றஜிகா (கனடா), இளஞ்செழியன், ஜெயகாந்தன், வதனரூபன், சரோஜினிதேவி, ஜெயந்திமாலா, ஞானசேகரம், குணசேகரம் (கனடா),தனரூபி, இராஜசேகரம், பாலசேகரம், ஞானரூபி, ஜெயரூபி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்தன் பிள்ளையார் கோயிலடி,*
*புளியங்கூடல் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.* (90889)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி சகுந்தலா யோகேந்திரம்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலா யோகேந்திரம் நேற்று (11.11. 2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், யோகேந்திரன் (அரியாலை ப.தெ. வள அபிவிருத்தி கூ.ச.) அன்பு மனைவியும், காந்தரூபனின் (செல்வா) அன்புத் தாயாரும், தெய்வேந்திரம், புவனேந்திரம், சரோஜா, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வனிதாவின் அன்பு மாமியாரும், சச்சின்ராஜ், ராகுல்ராஜ் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்), ருக்சிகா (மாணவி - திருக் குடும்ப கன்னியர்மட ம.வி.) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*51/2 நெடுங்குளம் வீதி,*
*கொழும்புத்துறை.* (90897)

தகவல்:
மகன் - காந்தரூபன்
(செல்வா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# எதிர்பார்க்கும் தீர்வுக்கான மட்டத்தை தலைமைகள் தீர்மானிக்க வேண்டும்

வன்னியில் தமிழர் தரப்புக்கு ஏற்பட்ட யுத்தப் பின்னடைவின் பின்னர், ஆயுத ரீதியான வலிமை தமிழர்கள் தரப்பில் வலுவிழந்து விட்டது என்ற யதார்த்தப் புறநிலை காரணமாக, அரசியல் ரீதியாகத் தங்களைப் பலப்படுத்தும் அவசியத்தைத் தமிழர் தலைமைகள் நன்கு உணர்ந்திருக்கின்றன.

ஈழத் தமிழர்களுக்கு இலங்கைத் தீவில் நீதி, நியாயமான தீர்வு இனிமேல் கிட்டவேண்டுமானால் - தங்கள் உரிமைகளுக்காக - சளைக்காது போராடவேண்டிய கட்டாயம் தங்களுக்குத் தவிர்க்க முடியாததாகி உள்ளது என்பதைத் தமிழர் தலைவர்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதன் காரணமாகப் பல்வேறு அணிகளிலும், கொள்கைக் கோட்பாடுகளிலும் பிளவுண்டு நின்ற தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள் இருந்த வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு, உசாவி, உரையாடி ஓரணி சேரத் தலைப்பட்டிருக்கின்றார்கள்.

இதன் ஓர் அங்கமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நேற்றுமுன்தினம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (வரதராஜப் பெருமாள் பிரிவு) பிரமுகர் ஸ்ரீதரனுடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருக்கின்றார்கள்.

அதேநேரம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரியையும் இந்த ஒன்றிப்புக்குள் மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்றும், இச்சந்திப்பு இன்றோ அல்லது நாளையோ சாத்தியமாகலாம் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை பெரும்பான்மை இனத்தவரின் பேரினவாத மேலாதிக்கத்துக்குள் சிக்கித் துவண்டு கிடக்கும் சிறுபான்மையினர், தங்களுக்கு நீதி கிட்டவேண்டுமானால் ஒன்றுபட்டு அதற்காகப் போராடுவதும் குரல் எழுப்புவதும் தவிர்க்க முடியாதவை என்ற நிலையில், சிறுபான்மையினரின் அந்த ஒன்றுபடுதல் இங்கு இரண்டு தளங்களில் சாத்தியமாகுகின்றது.

ஒன்று - சிறுபான்மை இனத்தவர்கள் என்ற முறையில், தமிழ் பேசும் மக்களாகிய வடக்கு, கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்டோர், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் ஆகிய முத்தரப்பின் தலைவர்கள் தமக்குள் ஒன்றிணைகின்றமை.

அடுத்தது - சிறுபான்மையினரான வடக்கு - கிழக்குத் தமிழர்கள் தங்களுக்குள் ஒன்றிப்பது.

இந்த இரண்டு தளங்களிலுமே ஒன்றிணைவதற்கான எத்தனங்கள் இப்போது குறிப்பிடத்தக்க ஆரோக்கியமான நிலைமையை நோக்கி முன்நகர்கின்றமை கண்கூடு; அது வெளிப்படையானது.

வடக்கு - கிழக்குத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், மலையகக் கட்சிகள், முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற தரப்புகளுக்கு இடையே கூட்டை ஏற்படுத்துவது குறித்து பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு, ஆரோக்கியமான திசையில் அந்த முயற்சிகள் நடக்கின்றன எனவும் அந்தக் கூட்டுக் குறித்து இந்த வார இறுதிக்குள் திட்டவட்டமான முடிவு அறிவிக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பு அரசினால் அடக்கப்படுகின்ற தரப்புகளாக இருக்கும் சிறுபான்மையினர் அந்த அடக்குமுறையிலிருந்து தங்களைப் பாதுகாத்துத் தத்தமது இனங்களினதும் சமூகங்களினதும் தனித்துவங்களையும், வரலாற்று விழுமியங்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் காப்பாற்றிப் பேணுவதற்காகத் தலையால் கிடங்கு கிண்டும் அளவுக்குப் போராடவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

தங்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களைக் காப்பாற்றி உறுதிப்படுத்தல், பாரம்பரிய தாயகப் பூமியை பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புக் கபளீகரத்தில் இருந்து பாதுகாத்துப் பேணுதல், பேரினவாதத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களை எதிர்கொண்டு தடுத்தல், பொதுவான உரிமைகளுக்காகக் களச்சமராடுதல் என்பன போன்ற பொதுப் பிரச்சினைகளுக்காக சிறுபான்மையினரின் பிரதான கட்சிகள் தமக்குள் கூட்டமைக்க வேண்டியனவாக இருக்கின்றன.

அதேசமயம், இதுபோன்ற பிறிதான - வேறு - காரணங்களுக்காக வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமைகளும் ஒன்றுபட வேண்டியவையாக இருக்கின்றன.

அவற்றின் ஒன்றிப்பு என்பது தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை எட்டுவதற்கான போராட்டங்களுக்குத் தங்களை முஸ்தீபு செய்து, அந்தப் போராட்டங்களில் முழு அளவில் தங்களை இணைத்துக் கொள்ளும்படியான செயற்பாட்டுக்குத் தமிழர் தலைவர்களை உட்படுத்துவதாகும்.

இந்த எத்தனங்களில் ஈடுபடும் தமிழ்த் தலைவர்கள் இலங்கை இனப்பிரச்சினை விடயத்திற்கான தாங்கள் எதிர்பார்க்கும் தீர்வு எந்த மட்டத்தில் இருக்கவேண்டும், அதில் தங்களின் பங்களிப்பு என்ன என்பவற்றையெல்லாம் முற்கூட்டியே தீர்மானித்து, இந்த முயற்சியில் ஈடுபடுவதே வரவேற்கத்தக்கது.

இது விடயத்தில் பல மட்டக் கருத்துகள் நிலவுகின்றன.

கொழும்பில் செயற்படும் தமிழ்த் தலைவர்களில் சிலர், வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்ற தமிழீழப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டதாகத் தமிழர்களின் மாறாத நிலைப்பாடு இருக்கவேண்டும் என்கின்றனர்.

வேறு சிலர், முழு சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தி நிற்கின்ற திம்புக் கோட்பாடு பற்றிப் பிரஸ்தாபிக்கின்றனர்.

மற்றும் சிலரோ, புலிகளும், இலங்கை அரசும் முன்னர் ஒஸ்லோ அறிவிப்பு மூலம் ஒப்புக்கொண்ட 'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு' இப் பேச்சுகளின் அடிப்படையாக இருக்கவேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

பிறிதான சிலரோ, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்தலாம் என்கின்றனர்.

இப்படிப் பலதரப்பட்ட கருத்துகள் நிலவுவதால், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நன்நோக்கத்துக்காகத் தங்களுக்குள் ஒன்றுபட முயலும் தமிழர் தரப்புகள் - தலைவர்கள் - முதலில் எதை அடிப்படையாக வைத்துக்கொண்டு தங்களின் ஒன்றிப்பு அமையவேண்டும் என்பதை முதலிலேயே பேசித் தீர்மானித்துக்கொள்வது நல்லது.

அதை விடுத்து, தமக்குள் ஒன்றுசேர்ந்த பின்னர் எதை அடிப்படையாக வைத்துக் காரியத்தை முன்நகர்த்துவது எனப் பின்பு சச்சரவுப்படுவதில் அர்த்தமில்லை.

ஆகவே, குறைந்த பட்சத் தீர்வுக்கான தங்களின் அடிப்படை எது என்பதை முற்கூட்டியே அவர்கள் தீர்மானித்துப் பிரகடனப் படுத்திக்கொள்வது சாலச் சிறந்தது.

# வல்வெட்டித்துறை முதல் தொண்டைமானாறு வரையான பகுதி கடல் அரிப்பினால் சேதமடைந்து கடலில் மூழ்கும் அபாயம்

## தடுப்புச் சுவர்களை அமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.12

வல்வெட்டித்துறை முதல் தொண்டைமானாறு வரையிலான கடற்கரைப் பிரதேசம் மோசமான கடல் அரிப்பினால் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப் பிரதேசங்களை காப்பாற்ற மூன்று கிலோமீற்றர் நீளமான பிரதேசங்களுக்கு தடுப்பு அணைகளை உடன் அமைக்க வேண்டும்.

இவ்வாறு உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்ற சங்கத்தின் தலைவர் தேவராஜா பிரசாத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 26.12.2004 இல் இடம்பெற்ற சுனாமிப் பேரலையினால் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கம்பர் மலை, மயிலியதனை, கெருடாவில், ஊரிக்காடு, நாவலடி, கொம்மந்தறை போன்ற கடற்கரைப் பிரதேசங்கள் அழிவடைந்துள்ளன.

தற்போது தினமும் வீசும் மோசமான கடற்காற்றினால் கடற்கரைப் பிரதேசம் கடலில் மூழ்கி வருகின்றது.

எனவே 2005 இல் அரசாங்க அதிபர் க.கணேஷ் அவர்கள் மேற்படி பகுதிகளுக்கு தடுப்பு அணைச் சுவர் அமைத்துத் தருவதாக உறுதியளித்திருந்தார்.

தற்போது 4 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது.

பிரதேச மக்களைக் காப்பாற்ற 'நெக்டப்' திட்டத்தின் ஊடாக உதவ வேண்டும் என்றார்.

இதேவேளை-

ஊரிக்காடு இந்துமயானம் மோசமான கடல் அரிப்பினால் அழிவடைந்துள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபைக்கு மூன்று மகஜர் எழுதிய போதும் இதுவரை திட்டம் நிறைவேறவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. (50-302)

# 2008 இல் கணித பாடத்துக்கு தோற்றாத மாணவர்கள் இம்முறை பரீட்சை எழுத வசதி

## வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.12

கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ சாதாரண தரப்பரீட்சையில் விசேடமாக நடத்தப்பட்ட கணித பாட பரீட்சைக்கு வன்னியில் இருந்து தோற்றாத மாணவர்கள் உடனடியாக யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகமளித்து தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரண தரப்பரீட்சையில் அந்த மாணவர்கள் கணித பாடப் பரீட்சையினை எழுதுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இத்தகவலை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ சாதாரண பரீட்சையின் போது கணித பாடம் இரண்டாவது தடவையாக நடத்தப்பட்டது.

அக்கால கட்டத்தில் வன்னியில் இருந்த மாணவர்கள் யுத்தம், இடப்பெயர்வுகள் காரணமாக விசேட கணித பாட பரீட் சைக்குத் தோற்றத் தவறிவிட்டார்கள். அந்த மாணவர்களுடைய சாதாரண தரப்பரீட்சை பெறுபேற்றறிக்கையில் கணிதபாட பெறுபேறுகள் இல்லாமல் உள்ளன. அதனால் அத்தகைய மாணவர்கள் தமது உயர் கல்வியினைக் கற்க முடியாது பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டு நலன்புரி நிலையங்களில் இருந்து தற்போது மீள் குடியமர்த்தப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் இம்முறை நடைபெறவுள்ள சாதாரண தரப்பரீட்சையில் கணித பாடத்தில் தோற்றுவதற்கு வசதியாக தமது பெயர், முன்னர் கற்ற பாடசாலையின் விவரம் என்பவற்றுடன் யாழ். வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார் அவர். (50-9)

# கடந்த ஆண்டு சாதாரண தரப்பரீட்சையில் சித்தி எய்தாத வன்னி மாணவரை பாடசாலைப் பரீட்சார்த்திகளாகப் பதிவு செய்க

## வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.12

வன்னியிலிருந்து கடந்த ஆண்டு சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தயடையாத மாணவர்களை டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சைக்கு பாடசாலை பரீட்சார்த்திகளாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இவ் வாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது விடயம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தவை வருமாறு-

கடந்த ஆண்டு நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சைக்கு வன்னியில் இருந்து முதல் தடவையாகத் தோற்றி சித்தியடையாத மாணவர்கள் மீண்டும் இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பாடசாலைப் பரீட்சாத்திகளாக இணைத்துக் கொள்ளவேண்டும் என்று பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

எனவே நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீள் குடியமர்த்தப்பட்டுள்ள, இம்முறை சாதாரணதர பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக தோற்றவுள்ள மாணவர்கள் தமது அயற் பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு அதற்கான அறிவுறுத்தல்களைப் பெற்று பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (50-9)

# டிசெம்பர் மாத இறுதிக்குள் வவுனியா முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீளக் குடியமர்த்தப்படுவர்

## மலேசிய இலங்கையர் கூட்ட மைப்பினருக்கு ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம், நவ.12

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களை மீளக்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் இதுவரை யாழ்ப்பாணத்தில் 65 ஆயிரம் பொதுமக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், நலன்புரி முகாம்களை மூடிவிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாவும், எதிர்வரும் டிசெம்பர் மாத முடிவுக்குள் வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பொதுமக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமெனத் தான் நம்புவதாகவும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடபகுதியின் தற்போதைய நிலை குறித்துக் கலந்துரையாடவும், வடமாகாணத்தில் முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறித்து பரிசீலிக்கவுமென இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மலேசியா வாழ் இலங்கையின் வர்த்தகப் பிரமுகர்கள் அடங்கிய குழுவினர் கடந்த 10 ஆம் திகதி காலை கொழும்பில் தம்மைச் சந்தித்து கலந்துரையாடிய போது வடமாகாண ஆளுநர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

மலேசிய இலங்கையர் கூட்டமைப்பினர் பிரதிநிதிகளுடான மேற்படி சந்திப்பின் போது, வடமாகாணத்தில் அரசுமேற்கொண்டுவரும் புதிய அபிவிருத்தி நடவடிக்கைகள், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளமை குறித்து ஆளுநர் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சகல தீவுகளிலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது கிளிநொச்சி, துணுக்காய் பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்த ஆளுநர், வடபகுதியில் இனங்காணப்பட்டுள்ள முதலீட்டு முயற்சிகள் குறித்தும் வர்த்தகப் பிரதிநிதிகளுக்கு விளக்கிக் கூறினார்.

மலேசிய-இலங்கை வர்த்தகக் குழுவினர் யாழ்.மாவட்டத்துக்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட ஆவல் கொண்டிருப்பதாகவும், அப்பகுதியில் முதலீடுகளை மேற்கொள்ள அவர்களுக்கு இருக்கும் வாய்ப்புக்கள் மற்றும் அப்பகுதியில் இயல்பு வாழ்க்கையை உருவாக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்பவை குறித்து ஆளுநர் தெளிவுபடுத்தினார். (50-03)

# நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 27 | 13.11.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.இ. 03.10 வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | [illegible] 07.16 வரை |
| சுபநேரம்: | 06.07 - 7.37 வரை |
| ராகுகாலம்: | 10.37 - 12.07 வரை |

# ஆங்கில ஆசிரியர்களுக்கு இலவசப் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.12

கொழும்பு மொழித்திறன் மற்றும் நாடகக் கலை கல்வி நிறுனம் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிப்பது தொடர்பான பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இப் பயிற்சி நெறிகள் காலை 8.30 மணி தொடக்கம் ஒரு மணிவரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுமொழி, தொடர்பாடல் திறன், முனைப்பான தொடர்பாடல், உரையாடல், நாடகம் மற்றும் இவை தொடர்பான கற்கை நெறிகளை ஆசிரியர்களுக்கு கற்பிப்பது தமது நோக்கம் என்றும் இத் திட்டம் இலவசமாக மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English For Life



John Keells English Language Scholarship Project Conducted by Gateway Language Centre

வயது: 17-25

வாழ்க்கைக்கான ஆங்கிலம் கற்பதற்காக

***John Keells*** நிறுவனத்தினால்

புலமைப்பரிசில் வழங்கப்பட்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாடநெறி ஆரம்பமாகியுள்ளது. இன்னும் 30 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட இருப்பதனால் மேற்படி கற்கை நெறியைப் பயில விரும்புபவர்களைத் தேர்ந்து எடுப்பதற்கு **15.11.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு** ***Gateway Language Centre***, 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடைபெறவுள்ளது. உங்களது சுயவிவரக்கூற்றினை 14.11.2009 நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக மேற்படி விலாசத்தில் சமர்ப்பிக்கவும்.

**அமைப்பாளர்.**



# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை புதிய கட்டடங்களின் திறப்பு விழா அழைப்பு

காலம்: **14.11.2009 ஆம் திகதி சனிக்கிழமை**
**மு.ப. 8.30 மணி**

தலைவர்: **வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

**திறப்பு விழாக் காணும் புதிய கட்டடங்கள்**

- ★ வெளிநோயாளர் பிரிவு கட்டடம்
- ★ மருந்துக் களஞ்சியம்
- ★ நோயாளர் தங்குவிடுதி

**இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

வைத்தியசாலை அபிவிருத்திச்சபை,
ஆதார வைத்தியசாலை,
சாவகச்சேரி.

வைத்திய அத்காரி,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி.



# சர்வதேச (HIV/AIDS) தினத்தையொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடத்தப்படவுள்ள சுவரொட்டிப் போட்டி - 2009 (Poster Competition - 2009)

★ போட்டி விபரம்:
1 ஆம் பரிசு : ரூபா 10,000/=
2 ஆம் பரிசு : ரூபா 7,500/=
3 ஆம் பரிசு : ரூபா 5,000/=

ஆறுதல் பரிசுகள் : *தலா 2,000/= ப்படி (5பேருக்கு) பரிசுத்தொகை தலா இரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனியாக வழங்கப்படும்.*

★ போட்டித் தலைப்பு: HIV இல் இருந்து எம்மைப் பாதுகாப்போம்.
★ தாளின் அளவு: 18" x 14"
★ வர்ண ஊடகம் : விரும்பியது
★ போட்டிப் பிரிவு : **பிரிவு 1.** பாடசாலை மாணவர்களுக்குரியது (தரம்10 உம் அதற்கு மேற்பட்டதும்)
**பிரிவு 2.** திறந்த போட்டி.
★ விண்ணப்ப முடிவுத்திகதி : 19.11.2009
★ விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டிய முகவரி: பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்.
572/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
★ கடித இடதுபக்க தபால் உறையில் குறிப்பிடல்: சுவரொட்டிப் போட்டி -2009
(சர்வதேச HIV/AIDS தினம்)

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

**பிரிவு - 1**

1. மாணவ/மாணவியின் முழுப்பெயர் :-.......................................
2. தற்போது கல்வி பயிலும் தரம் :- .......................................
3. பிறந்த திகதி :- ஆண்டு ............... மாதம் .................. திகதி ................
4. பாடசாலையின் பெயர் :- .......................................
5. பாடசாலை தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :- ...............................
6. வீட்டு முகவரி :- .......................................
7. பாடசாலை அதிபரின் சிபாரிசு :

**பிரிவு - 2**

1. முழுப்பெயர்:
2. பதவி/தொழில்:
3. முகவரி:
4. தொலைபேசி இலக்கம்:

மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தினை 19.11.2009 ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரடியாக கையளிக்கலாம்.

சுரொட்டிப் போட்டி 21.11.2009 ஆம் திகதி அன்று நடைபெறும். பரீட்சை நிலையம், நேரம் என்பன பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு
1. 021 222 2278
2. 021 222 8968

நிதியுதவி UNHCR அனுசரணை ZOA

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

(சி/562261)


## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்.மாநகர சபைப் பிரதேசத்தில் இயங்கும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாநகர மேயர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளிகளின் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அழைக்கப்பட்டுள்ள இக்கலந்துரையாடலில் சகல முன்பள்ளிகளின் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-111)

## தென்மராட்சியில் இன்று தரம் 9 மாணவருக்கு மாகாணமட்டப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 9 வகுப்பு மாணவர்களை ஆண்டிறுதி மற்றும் மாகாண மட்டப் பரீட்சை ஆகியவற்றுக்கு தயார்ப்படுத்தும் கணித பாடக் கருத்தரங்கு இன்று பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இதேவேளை தரம் 6 மாணவர்களுக்கான கணித பாட பயிற்சிப் பட்டறையும் இன்று நடைபெறும்.

இப் பரீட்சைக்கான வினாத்தாள்களை இன்று வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(1-207)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



04.11.2009 புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான 6ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பட்டம் பெற்ற

**திருச்சிற்றம்பலம் நவநீதன்**
**(H.N.D.M 2006 - 2008)**

அவர்களை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**திரு.திருமதி T.மோகனதாஸ்**
**(LONDON)**



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1138 நீலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் 21 33 52 55

**10-11-2009**

ஜக்பொட் பரிசு ரூபா. 4,745,350/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 206,510 | 20/- | 4,130,200/- |
| 2 இலக்கங்கள் | 18,546 | 40/- | 741,840/- |
| 1 இல. + லக்கினம் | 18,694 | 60/- | 1,121,640/- |
| 2 இல. + லக்கினம் | 1,730 | 200/- | 346,000/- |
| 3 இலக்கங்கள் | 501 | 1000/- | 501,000/- |
| 3 இல. + லக்கினம் | 38 | 10,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 4,745,350/- | 4,745,350/- |
| மொத்தம் | | | 12,366,030/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 246,027 | | 12,866,030/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காக வெற்றியாளர் : ஏ.பி.இந்திக குலரத்ன அனுராதபுரம்

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ஆர்.பி.எஸ்.நவகமுவ இரத்மலான

2009 நொவெம்பர் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.


| | |
|---|---|
| புத்தளம் | 400687690-1-38 |
| திருகோணமலை | 400683501-3-24 |
| கம்பஹா | 400685506-2-26 |
| மாத்தறை | 400676510-5-15 |
| பொலன்னறுவை | 400688605-1-22 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


# மரண அறிவித்தல்

## பிறேமதாஸ் நிருஷன்



மல்லாவியைப் பிறப்பிடமாகவும், பன்னாலை, தெல்லிப்பழையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நிருஷன் நேற்று (11.11.2009) புதன்கிழமை மரணமானார்.

அன்னார் பிறேமதாஸ் - சுகந்தினி தம்பதியரின் அன்பு மகனும், டிலக்ஷன், தர்மிகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விநாயகமூர்த்தி - யோகேஸ்வரி தம்பதிகள், தம்பிப்பிள்ளை - திலகவதி தம்பதிகளின் அன்புப் பேரனும், சுதாகரன், தயாணி ஆகியோரின் அன்பு மருமகனும், பிறேமச்சந்திரன், மதுமரஞ்சிதம், பிறேமானந்தன், கிரிஷா, சுமதினி, நடராசா ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.*

(சி/562265)

தகவல்:
**சிவபாதம் - கோபால்**
**(பேரன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகு வேலைத்திட்டம் மேற்கொண்டோருக்கு இரண்டாம்கட்ட நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.12

இலகு வேலைத்திட்டம் மேற்கொள்பவர்களுக்கான இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் இந்த வாரத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான வழங்கல் கட்டளைகள் பெறப்பட்டு பொருள்களை யாழ்.செயலகம் வழங்கி வருகின்றது.

பெரும்பாலும் இந்த வாரத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மேற்படி திட்டத்தில் பங்குபற்றியோருக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

(203-224)

# செஞ்சிலுவைக் குழுவுக்கு மந்திகையில் களஞ்சியம்

வடமராட்சி , நவ.12

நலன்புரி நிலையங்களிலிருந்து மீளக் குடியேறிய குடும்பங்களுக்கு அரைநிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு வசதியாக செஞ்சிலுவை சர்வதேசக் குழு மந்திகையில் களஞ்சியம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.செயலகத்தின் இக்களஞ்சியத்தை தமது தேவைக்காகப் பெற்றுக்கொண்ட செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதனைத் திருத்தி வீடுகள் அமைப்பதற்கான கட்டட உபகரணங்கள் மற்றும் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளது. (50-236)

# செயலமர்வுகள்

வடமராட்சி, நவ.12

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 9இல் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 10 ஆம், 11ஆம் தரங்களில் குடியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 15ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய நிலையத்தில் செயலமர்வுகள் இடம் பெறவுள்ளன.

குறிப்பிட்ட பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-236)

# இலகு வேலைத்திட்ட நிவாரணத்தை அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்குக

## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

பண்டத்தரிப்பு, நவ.12

இலகு வேலைத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் ஒரு அங்கத்தவருக்குரிய உலர் உணவின் அளவே ஒன்பது அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வருவதால் அங்கத்தவர் எண்ணிக்கை அதிகமாக உள்ள குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் உலக உணவு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உலர் உணவு, அங்கத்தவர் தொகைக்கு ஏற்ப வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1-5 அங்கத்தவர் என்ற அடிப்படையில் உலர் உணவு வழங்கப்பட்டது. தற்போது ஒரு அங்கத்தவருக்கு வழங்கப்படும் உலர் உணவின் அளவே ஒன்பது அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கும் வழங்கப்படுகின்றது.

வருமானம் குறைந்த குடும்பங்கள் இதனால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது.

உலர்உணவு வழங்குவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மனிதாபிமான முறையில் அணுகி குடும்ப அங்கத்தவர் தொகைக்கு ஏற்ப வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

(203-201-130)

# ப.நு.பிரதேச சபையால் நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரை இடும் பணிகள்

வடமராட்சி, நவ.12

பருத்தித்துறைப் பிரதேச சபை பொது நூலக வளாகத்தில் வைத்து நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரை இடும் பணி எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமையும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பிரதேசசபை எல்லைக்குட்பட்ட நிறுத்தல், அளவைகள், கருவிகளைப் பயன்படுத்தும் வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் பலநோக்குக் கூட்டுவுச் சங்கங்கள் தமது கருவிகளுக்கு முத்திரை இட்டுக் கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் கேட்டுள்ளார்.

(203-236)

# சமுர்த்தி முத்திரைகளின் பெறுமதியை அதிகரிக்குமாறு சமூகநலத்துறை அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.12

தற்போது வழங்கப்பட்டு வரும் சமுர்த்தி முத்திரைகளின் பெறுமதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைக்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்ததாகக் கூறப்பட்டது. கலந்துரையாடலில் யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திரு.நாகேஸ்வரகுமார், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(203-224)

# சைக்கிள் திருடர்கள் யாழ்.நகரில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்.நகரில் சைக்கிள் திருடர்களின் கைவரிசை அதிகரித்துக் காணப்படுகின்றது.

நகரில் சைக்கிளைப் பூட்டிவிட்டு பொருள்களை வாங்கிய பின்னர் திரும்பும் வேளையில் சைக்கிள்கள் காணாமல் போவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை நகரில் பூட்டப்பட்ட சைக்கிள் ஒன்றை பூட்டை உடைத்துத் திருட முயன்ற சமயம் அங்கு நின்றோர் கூக்குரலிட அவர்கள் தப்பியோடியதாகக் கூறப்பட்டது.

(203-224)

# இலங்கையில் இராணுவப் புரட்சி இடம்பெறும் சாத்தியம் உள்ளது

## அமைச்சர் நந்தன குணத்திலக அச்சம்

கொழும்பு, நவ.12

இலங்கையில் எதிர்வரும் காலத்தில் இராணுவச் சதிப் புரட்சி ஏற்படும் சாத்தியம் உள்ளது - என்று சுற்றுலாத்துறை அமைச்சர் நந்தன குணத்திலக அச்சம் வெளியிட்டுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியிலிருந்து விலகிய அமைச்சர், களுத்துறையில் நேற்று முன்தினம் அந்தக் கட்சி உறுப்பினர்களுடன் நடத்திய உரையாடலின் போதே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேளை முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா போட்டியிடுவார். அவர் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நடைபெற்ற இராணுவச் சதிப் புரட்சியைப் போல் இலங்கையிலும் ஏற்படலாம்.

தேர்தலில் சரத் பொன்சேகா போட்டியிட்டாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலகுவில் வெற்றி பெறுவார். ஆனால் அந்த சமயத்தில் இராணுவச் சதிப்புரட்சி இடம் பெறும் சாத்தியங்கள் இருக்கின்றன - என்றார்.

மேலும் அவர் விமல்வீரவன்ஸவை கடுமையாக விமர்சித்தார். விமல் வீரவன்ஸ ஒரு சந்தர்ப்பவாதி என்றும் அவரின் தலைமைத்துவத்தை ஏற்கவேண்டாம் என்றும் தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர்களிடம் கூறினார். (சி)

# சரணடைந்த புலி இயக்க உறுப்பினருக்கு வவுனியாவில் புனர்வாழ்வு நிலையங்கள்

கொழும்பு,நவ.12

படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க வவுனியாவில் 20 புனர்வாழ்வு நிலையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப் புனர்வாழ்வு நிலையங்களுக்கு விஜயம் செய்தார்.

சரணடைந்த 11 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களில் பெரும்பாலானோருக்குக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பம்பைமடுவிலுள்ள பெண் புலி உறுப்பினர்களுக்கான புனர்வாழ்வு நிலையத்தை அமைச்சர் மிலிந்த மொறகொட பார்வையிட்டார்.

அத்துடன், வலயம் 5இல் நிர்மாணிக்கப்படும் புதிய புனர்வாழ்வு நிலையத்திற்கும் அவர் விஜயம் செய்தார்.

புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க, நோர்வே தூதுவர் உள்ளிட்ட பலர் இந்த விஜயத்தில் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் இதுவரை 14 புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

# எத்தேர்தலை அரசு நடத்தினாலும் அதற்கு எந்நேரமும் ஐ.தே.க. தயார்

## திஸ்ஸ அத்தநாயக்க சவால்

கொழும்பு,நவ.12

எந்தத் தேர்தலை அரசு நடத்தினாலும் அதை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் தயாராகவுள்ளது - என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சவால் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அரசு விரைவில் அறிவிக்க வேண்டும். இந்த அறிவிப்பை தாமதப்படுத்திக் கொண்டே அரசு செல்கிறது. அரசு மக்களை ஏமாற்றாமல் விரைவாகத் தேர்தல் அறிவிப்பை வெளியிட வேண்டும் - என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு - ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது பொதுத் தேர்தலையோ அரசு நடத்தலாம். அதை எந்தத் தயக்கமுமின்றி எதிர்கொள்ள எப்போதும் ஐக்கியதேசியக் கட்சி தயாராகவுள்ளது. அரசு மக்களை ஏமாற்றாமல் விரைவாக தேர்தல் அறிவிப்பை வெளியிட வேண்டும்.

நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன ஒரு மந்திரவாதியைப் போன்று மாறியுள்ளார்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க முடிந்துள்ள இந்த அரசு, சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருட்களின் விலைகளையும் குறைத்துக் காட்டுமாறு சவால் விடுத்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களை நோக்காகக் கொண்டே அரசு இந்த விலைக்குறைப்பை மேற்கொண்டுள்ளது. அதன் மூலம் மக்களை தம்வசப்படுத்தும் முயற்சிகளிலும் அரசு ஈடுபடுகிறது எனக் குறிப்பிட்டார். (சி)

# இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்காது

கொழும்பு,நவ.12

மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசு மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகத் தடைகள் எதனையும் கொண்டு வரப் போவதில்லையென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இராணுவ அதிகாரிகளும் ஏனைய முக்கிய அதிகாரிகளும் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு எதிராகத் தடை விதிக்கப்படலாம் என வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் மூத்த அதிகாரியொருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் எத்தகைய பேச்சுகளிலும் ஈடுபடவில்லை என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள முக்கிய பிரச்சினை இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை வழங்கப்படுமா இல்லையா என்பதே எனத் தெரிவித்துள்ள அந்த அதிகாரி, இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி.' வழங்கப்படாவிட்டாலும் அடுத்த தடவை 'ஜி.எஸ்.பி.'யை வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெறும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் போக்குவரத்துத் தடையை விதிப்பது குறித்த சட்ட நடவடிக்கையை ஐரோப்பிய கவுன்ஸிலே எடுக்கவேண்டும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஆணைக்குழு இலங்கை அரசுடன் ஆக்கபூர்வமான பேச்சுகளைத் தொடர்வதில் ஆர்வமாக உள்ளது. இது நாங்கள் அவர்கள் மீது தடைகள் விதிப்பது குறித்து சிந்திக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

# புலிகள் இயக்கத்தை ஆஸி தடை செய்ய வேண்டும்

## இலங்கை கோரிக்கை

கொழும்பு,நவ.12

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது ஆஸ்திரேலிய அரசு தடைவிதிக்க வேண்டும் என்று இலங்கை அரசு கோரியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் ரோமேஷ் ஜெயசிங்க இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவுக்கும் இலங்கை அரசின் உயர் மட்டக் குழுவுக்கும் இடையில் ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாகச் செல்ல முயல்வோர் குறித்துப் பேச்சுகள் இடம்பெற்றன. இதன்போதே வெளியுறவு அமைச்சின் செயலாளர் ஆஸ்திரேலிய உயர்மட்டக்குழுவிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் இயக்கம் இனிமேல் இல்லை. ஆனால் புலிகள் தங்கள் இயக்கத்தை மீளக் கட்டியெழுப்புவதற்க்கான முயற்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். எனவே இதுகுறித்து உலக நாடுகள் விழிப்பாக இருப்பதுடன் தடுத்து நிறுத்தவும் வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உண்மையான அகதிகளுக்கும் அகதிகள் என்ற போர்வையில் அரசியல் தஞ்சம் பெற முயல்பவர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை ஆஸி அரசு தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை முத்தவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள பிரதான வீதியில் உள்ள மதகு ஒன்று ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் நீண்டகாலத்துக்குப் பின்னர் புனரமைக்கப்படுகின்றது.

புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதையும் பொறியியலாளர் சிவநேசராஜா அவற்றைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: விக்ரோறி)

# யோகர் சுவாமிகளின் தியான மண்டபம் புனரமைப்பு

நல்லூர், நவ.12

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள், தியானத்தில் இருந்த இடம் முன்னர் இருந்தது போன்று வடிவமைக்கப்படவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள புனரமைப்புப் பணியை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்ரி பற்குணராசா ஆரம்பித்துவைப்பார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த இந்துக்களின் வேண்டுகோளுக்கமைய பழமையைப் பேணும் வகையில் யோகர் சுவாமிகள் தியானத்தில் இருந்து சிந்தனை செய்த இடம் முன்னர் இருந்தது போன்று புனரமைக்கப்படவுள்ளதாகவும் மரம் நடும் நிகழ்வும் இடம்பெறும் எனவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

(50-111)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 02.06.1933
விண்ணில்: 22.11.2008

மண்ணில்: 29.05.1937
விண்ணில்: 14.02.2008



அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம் — அமரர் தங்கரெத்தினம் பாலசிங்கம்

(நயினையில் மலர்ந்த நறுமலர்கள்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தோரே
கூரறிவு கொண்டோராய் எமையென்றும் வளர்த்தவரே
பாரினிலே பண்புயர் தெய்வங்களாய் திகழ்ந்தோரே
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே உம்மை

சாந்தி!

மீனாட்சியம்மன் கோயிலடி, 8 ஆம் வட்டாரம், நயினாதீவு. (சி/562215)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலிகள்

34ஆம் ஆண்டு

தோற்றம் 18 * 03 * 1918
மறைவு 14 * 11 * 1975



அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை

[பண்டிதர், இளைப்பாறிய அதிபர், நாரந்தனை வடக்கு]

ஆண்டுகள் பல ஓடித்தான் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் அகலவில்லை ஐயா!

முதலாம் ஆண்டு

தோற்றம் 25 * 03 * 1924
மறைவு 22 * 11 * 2008



திருமதி தங்கம்மா கணபதிப்பிள்ளை

[கனடா- நாரந்தனை வடக்கு]

நீங்கள் இல்லாமல் ஓராண்டு ஓடிவிட்டதை
நம்பமுடியவில்லை.
உங்கள் சிந்தனைகள், தியாகங்கள் யாவும்
என்றும் எம்மை வழி நடத்திச் செல்லும்

என்றும் நீங்கா நினைவலைகளுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

83/15, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (90853)

குடும்பத்தினர்.

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.12

'தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தின் ஏற்பாட்டில் காரைநகர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

(203-236)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ நாராயணா பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 * 06 * 1950

இறப்பு 16 * 11 * 2006



திருமதி நகுலேஸ்வரி இராகவன்

(ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

திதி: அபரபக்க ஏகாதசி (12.11.2009)

எம் இதயக் கோயிலிலே வீற்றிருந்து
இருளகற்றி ஒளிதந்த பெருவிளக்கே!
தம்மரிய பண்பாலே சேவையாலே
தரணியில் நீ உயர்ந்து நின்றாய், இன்று
உம்மை இழந்து ஆண்டுகள் மூன்றாகிப் போச்சு
உத்தமியே உன்நினைவால் வாடுகின்றோம்
எம்மையெல்லாம் இரட்சித்த தெய்வம் நீயே
என்றென்றும் இறைகழலில் இருப்பாய் அம்மா!


சு.இராகவன், அம்பலவாணர் பாதை, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் பிரிவால் வாழும்: குடும்பத்தினர்.

(90747)


சொல்வன்ட் டிஜிடல் பிரிண்டர்

1 வருட உத்தரவாதம்!
24 மணித்தியாலம் தொலைபேசி ஊடான சேவைகள்!
நாடு முழுவதும் 300 அதிகமான அச்சியந்திரங்கள்!



- 6 COLOR ROLAND QUALITY PRINTING
- அதி வேகமான 4 வர்ணங்கள் 8 ஹெடகள் (8 HEAD)
- தனித் தனியாக AUTO CLEANING செய்யும் வல்லமை கொண்டது.
- அதி வேகமாக அச்சிடலுக்காக OPTICAL FIBRE வயர் பயன்படுத்தப்படுகிறது (DATA INTERFACE).
- SEIKO SPT 510/35PL மற்றும் 255/35PL ஜப்பன் பிரின்ட் HEAD
- 5 அடியிலிருந்து 10 அடி வரை உங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

5 அடி நீளம் High Quality அச்சியந்திரங்கள் 12.5 லட்சத்திற்கு விற்பனைக்கு உண்டு.

இந்த PRINTING தொழில் 15 வருடங்கள் அனுபவமுள்ளவர்களால் இச் சேவை நடத்தப்படுகின்றது
Sole Distributors in Sri Lanka & Maldives
Silver Circle (Pvt) Ltd
03, விஜய குமாரதுங்க மாவத்தை, கொழும்பு - 05.
(பேஸ்லைன் வீதியில் அப்பலோ வைத்தியசாலை பாலம் அருகில்)
tel: 011 5678303 | fax: 011 2812712 | mobile: 0777766665
email: info@silvercircle.biz / supem@vinet.lk | web: www.silvercircle.biz

silver circle
Sole Master Reseller
INFINITI
Phaeton
Mimaki (Japan)
DGI (Korea)
AT
Sole OEM Partner for XaarJet (UK) in Sri Lanka
XAAR


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு

'உதயனில்' வாரந்தோறும் வெளிவரும் 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசினை உதயன்- சஞ்சீவி பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் வழங்குவதைப் படங்களில் காணலாம்.




சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ.த.றூத்ஸ்ரெபாணி பரிசு பெறுகின்றார்.




கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கே.இராஜகோபால் பரிசு பெறுகின்றார்.




நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டைச் சேர்ந்த ஸ்ரீகதிர்காமநாதன் கனோஜா பரிசு பெறுகின்றார்.



அத்துளு அம்மன் கோயிலடி, கரவெட்டியைச் சேர்ந்த வே. குமாரசுவாமி பரிசு பெறுகின்றார்.

## சிந்திக்கச் சில வரிகள்...

★ "நீதி" என்பது நீர்க்குமிழி அல்ல
நிலத்தை நோக்கிய வானம் போல!
★ "நிர்வாகம்" என்பது அடக்கி ஆள்வதல்ல
அனைவரையும் அரவணைப்பது!
★ "தலைமை" என்பது தட்டிக்கழித்தே போவதல்ல
தரும நிலையைக் காப்பது!
★ "ஒழுக்கம்" என்பது ஓய்வு நேர விளையாட்டல்ல
சிறந்த வாழ்வின் சித்திரமாகும்!
★ "கடமை" என்பது காலத்தைக் கடத்துவதல்ல
காரியத்திலும் திறமை காட்டுவது!
★ "படிப்பு" என்பது பாமரனை பரிகாசிப்பதற்கு அல்ல
பண்பாளனாக வாழ்வதற்கு!
★ "சிந்தனை" என்பது சிரிக்கும்போது வரும் சத்தமல்ல
அழுதிடாமலே வரும் கண்ணீராகும்!
★ "திறமை" என்பது திட்டம் போட்டு மறைப்பது அல்ல
தீர்வு காணத்துடிப்பது!
★ "உதவி" என்பது ஓயாமலே சொல்லித் திரிவதில்லை
ஒரு முறையேனும் செய்து விடுவது!
★ "உறுதி" என்பது ஒரு கோடி வார்த்தை அல்ல
உள்ளத்தில் தோன்றிடும் ஒரு வடு!



**ஸ்ரீ ஜனகராஜ்,**
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பிரிவின் தவிப்பு

வாலிபத்தின் வசந்த காலத்தில்
வந்து போனாய்-என்
சிநேகிதம் வாய்விட்டுப் புன்னகைக்க...

உன் நேசப்பார்வையும்
நேரிய சிந்தனைகளும் -எந்தன்
இதயத்தில் நட்புப் பூக்களை
மலர வைத்தது....

இந்த நிமிஷம்
இப்படியே நீளாதாவென
நினைத்திருந்த பொழுதொன்றில்
பிரிவோம்; சந்திப்போம் என்று
கண்கள் பனிக்க மொழிந்தாய்....



கடைசிநேரம்
கையசைத்து புன்னகைத்து
கனவாகிப் போனாய்....
என்றாவது என் நினைவலைகள்
உன்னை மீட்டும்போது
நான் உயிரோடு இருந்தால்
என் மனக்கதவுகள் திறந்தேயிருக்கும்
உன் நட்பின் புதுப்பித்தலுக்காய்....

ந.ராஜீ, கொடிகாமம்.

## கேள்விக்கு என்ன பதில்? -46இல் பரிசு பெறுவோர்

01) அ.சயந்தன்,
49, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
02) உ.தக்சாயணி, 'கணேச பவனம்',
பொன்னாலை வீதி, கட்டுடை.
03) பா.ஹ்ராக்டிமெல்சன்,
இல.30, சின்னக்கடை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

### கேள்விக்கு என்ன பதில்?-46இன் சரியான விடை

01. மாலைதீவு
02. மொஹமட் நஷீட்
03. காலநிலை மாற்றத்தினால் 50 வருடங்களுக்குள் மாலைதீவு கடலினுள் மூழ்கிவிடும் அபாயம் ஏற்படவுள்ளது. இதனால் எதிர்நோக்க வேண்டியிருக்கின்ற நெருக்கடிகள் தொடர்பில் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடைபெற்றது.

### கேள்விக்கு என்ன பதில்? - 48

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஆசிய கதாநாயகன் விருது எந்தச் சஞ்சிகையால் எப்போது வழங்கப்பட்டது?

(சரியான விடையை 19.11.2009இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## வாழ்வில் உயர....




அனைவரிடமும் அன்பாய் இரு
ஆசைகளைக் கட்டுப்படுத்தி வாழ்
இனிமையாகப் பேசு
ஈகை செய்து சிறந்திடு
உயிராகக் கல்வியைக் கற்றிடு
ஊருக்கு உதவி செய்திடு
எறும்பு போல உழைத்திடு
ஏணி போல் உதவிடு
ஐயம் இன்றி நட்புப் பூண்
ஒற்றுமையாக வாழ்ந்திடு
ஓதலில் ஆர்வம் காட்டிடு
ஔவையின் மொழியை மதித்திடு.

**வி. கீர்த்தனா,**
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## மிகப் பெரிய இரத்த வங்கி

உலகிலேயே மிகப்பெரிய இரத்த வங்கி அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம்தான். கிட்டத்தட்ட 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் இரத்ததானம் செய்துள்ளனர். அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்துடன் கிட்டத்தட்ட 3 ஆயிரம் மருத்துவமனைகள் தொடர்பு கொண்டுள்ளன. மேலும் அமெரிக்கா முழுவதும் இதன் தொடர்பு மையங்கள் உள்ளன. மேலும் இந்த அமைப்பு நிர்வாக வசதிக்காக 38 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரத்ததானத்தில் சாதனைகள் பல படைத்துள்ளதால் அமெரிக்காவின் செஞ்சிலுவைச்சங்கம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

**எக்ஸீனா முருகேசு,**
நல்லூர்.



## மனித வாழ்வுடன் இணைந்தவை

| | |
|---|---|
| ✱ வருவதும் போவதும் இரண்டு | - இன்பம், துன்பம் |
| ✱ வந்தால் போகாதவை இரண்டு | - புகழ், பழி |
| ✱ போனால் வராதவை இரண்டு | - மானம், உயிர் |
| ✱ தானாக வருபவை இரண்டு | - இளமை, முதுமை |
| ✱ நம்முடன் வருபவை இரண்டு | - புண்ணியம், பாவம் |
| ✱ அடக்கமுடியாதவை இரண்டு | - ஆசை, துக்கம் |
| ✱ அழிவைத் தருபவை இரண்டு | - பொறாமை, கோபம் |
| ✱ தவிர்க்கமுடியாதவை இரண்டு | - பசி, தாகம் |
| ✱ எல்லோருக்கும் சமனானவை இரண்டு | - பிறப்பு, இறப்பு |

**இ. கோவர்த்தனன் 8D,**
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
.................... ..............................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்த வாரம் வரலாற்றில்

**நவம்பர் 06**



ஈரான் நாட்டில் இடைக்கால அரசிடமிருந்து 'அயத்துல்லா கொமெய்னி' தலைமையிலான இஸ்லாமியப் புரட்சிகர சபை 1979 ஆம் ஆண்டு நவம்பர் 06 ஆம் திகதி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

**நவம்பர் 07**

1990 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் திகதி ஐரிஷ் குடியரசின் முதல் பெண் அதிபராக மேரி றொபின்சன் பதவியேற்றார்.



**நவம்பர் 08**



வேர்ஸ்பெர்க் பல்கலைக் கழகத்தில் ஆய்வொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 'வில்லியம் றொங்ட்ஜென்' என்பவர் எக்ஸ் றே கதிரை 1895 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் திகதி கண்டுபிடித்தார்.

**நவம்பர் 09**

பத்து வருடங்களாக செஸ் விளையாட்டில் அசைக்க முடியாத சம்பியனாக விளங்கிய அனட்டொலி கார்ப்போ என்பவரை 1988 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் திகதி மொஸ்கோவில் தோற்கடித்து உலக செஸ் சம்பியன் பட்டத்தை 'ஹரி காஸ்ப்பரோ' வென்றார்.



**நவம்பர் 10**



தன்னுடைய 27 ஆவது வயதில் ஜப்பானியச் சக்கரவர்த்தியாக 'ஹிரோ ஷிட்டோ' 1928 ஆம் ஆண்டு முடிசூடிக் கொண்டார்.

**நவம்பர் 11**

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்காக விளையாடிப் புகழ் பெற்ற வீரராக விளங்கிய 'றொட்னி மார்ஷ்' என்பவர் 1947 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி பிறந்தார்.



**நவம்பர் 12**



1847 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் திகதி மயக்க சாதனமாக 'குளோறோபோம்' இரசாயனப் பதார்த்தம் பாவனைக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மாவட்ட வலம் - பதுளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - II **34-T-II**

### பகுதி A - அமைப்புக்கட்டுரை வினாக்கள்


01. பின்வரும் உருவானது பெயர் பொறிக்கப்படாத நுணுக்குகாட்டி வழுக்கி ஒன்றினை நுணுக்குகாட்டி ஒன்றில் அவதானித்தபோது கண்ட அமைப்பாகும்.





1) a. மேற்படி உருவினை இனம் காண்க.
   b. A-F வரையிலான பகுதிகளைப் பெயரிடுக.
      A - ......
      B - ......
      C - ......
      D - ......
      E - ......
      F - ......
2) a. B இல் அதிகமாக காணப்படும் பொருள் எது?
      ......
   b. D பிரதேசம் ஏன் அதிகமாகக் காணப்படுகிறது?
      ......
3) a. E இன் தொழிலினைப் பெயரிடுக. ......
   b. B இனால் ஆற்றப்படும் தொழிற்பாட்டிற்கு அவசியமான புறக்காரணிகள் மூன்றைப் பெயரிடுக.
      1) ......
      2) ......
      3) ......
4) a. ஆவியுயிர்ப்பு பற்றி உமது சரியான கருத்தினைத் தருக.
      ......
   b. ஆவியுயிர்ப்பினால் தாவரங்கள் அடையும் நன்மைகள் 2 தருக.
      1) ......
      2) ......
5) a. B இன் மூலம் ஆற்றப்படும் தொழிற்பாட்டிற்கான சொற் சமன்பாட்டினையும் சூத்திர சமன்பாட்டினையும் தருக.
      சொற் சமன்பாடு:- ...... + ...... → ...... + ......
      சூத்திரச் சமன்பாடு:-
   b. B இல் நடைபெறும் தொழிற்பாட்டிற்காக தாவர இலைகள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் 2 தருக.
      1) ......
      2) ......
   c. ஒளித்தொகுப்பு, ஆவியுயிர்ப்பு ஆகியவற்றின் மூலம் இயற்கை சூழல் சமநிலை எங்ஙனம் பேணப்படுகிறது?
      ......

02. வேலைகளை இலகுவாக்கிக் கொள்வதற்காக எளிய பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் நெம்புகள், சாய்தளங்கள், கப்பிகள், சில்லும் அச்சாணியும் என்பன அடங்கும்.

1) a. நெம்புகள் மூன்று வகைப்படும். அவற்றை வகைப்படுத்துக.
      1) ......
      2) ......
      3) ......
   b. ஒவ்வொரு நெம்பு வகைக்கும் இரண்டு உதாரணம் வீதம் தருக.
      1) ...... :- ...... , ......
      2) ...... :- ...... , ......
      3) ...... :- ...... , ......
2) a.




தரப்பட்டுள்ள பொறியில் எத்தனம் பிரயோகிக்கக்கூடிய பொருத்தமான புள்ளியை இனங்காண்க.
      ......
   b. நெம்புகளில் வேலைகளை இலகுவாக்க சுமை, சுழலிடம், எத்தனம் என்பன பிரயோகிக்கப்படவேண்டிய விதத்தினைச் சுருக்கமாகத் தருக.
      ......
      ......
      ......
3) a. கப்பி ஒன்றில் பொறிமுறை நயம் எப்போதும் ஒன்றாக இருப்பதற்கான காரணம் யாது?
      ......
   b. பொருட்களை மேலே உயர்த்துவதற்கு கப்பி தவிர்த்து பயன்படுத்தக்கூடிய இரண்டு பொறிகளைத் தருக.
      1) ......
      2) ......



   c. அருகில் உள்ள கப்பித்தொகுதிக்கான இழையினை வரைக.
   d. கப்பிகளின் வகைகள் 2 தருக.
      1) ......
      2) ......
4) பஸ் ஒன்றின் இயக்கத் திசையை மாற்றுவதற்காக பயன்படுத்தும் பொறியின் வகையைக் குறிப்பிடுக.
      ......

03. வாயுக்களின் நடத்தைக் கோலங்கள் தொடர்பாகக் காலத்திற்கு காலம் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

1) a. ரொபட் பொயிலின் வாயு விதியைத் தருக.
      ......
   b. வாயுக்களின் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 தருக.
      1) ......
      2) ......
      3) ......
2) a. வாயு அமுக்கத்தைப் பயன்படுத்தி செய்யத்தக்க உபகரணம் ஒன்றைத் தருக.
      ......
   b. வளிமண்டல அமுக்கம் கடல்மட்டத்தில் எவ்வளவு?
      ......
   c. வளியின் அமுக்கத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் 2 தருக.
      1) ......
      2) ......
3) a. ஒட்சிசன் வாயுவை ஆய்வுகூடத்தில் தயாரிக்கும்போது நடைபெறும் தாக்கத்திற்கான ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.
      ......
   b. ஒட்சிசன் வாயு தயாரிப்பில் வெளிவரும் வாயு சேகரித்தல் எவ்வாறு கூறப்படும்?
      ......
4) a. ஆவர்த்தன அட்டவணையில் காணப்படும் ஒரணு வாயுக்கள் 2 தருக.
      1) ......
      2) ......
   b. ஆவர்த்தன அட்டவணை அமைக்கப்பட்டதன் நோக்கத்தினைச் சுருக்கமாகத் தருக.
      ......

04. மனிதனது வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமையும் நிகழ்வுகளில் சூழல் மாசடைதல் மிக முக்கிய பங்கை வகிக்கிறது.

1) a. சூழல் மாசடைதல் எனும் பதத்திற்கான வரைவிலக்கணத்தைத் தருக.
      ......
   b. நவீன விவசாய முறைகள் மூலம் சூழல் மாசடையும் முறைகள் 2 தருக.
      1) ......
      2) ......
2) a. வாகனங்களில் எரிபொருள் தகனம் நடைபெறுவதால் சூழலுக்கு விடுவிக்கப்படும் கழிவுப் பதார்த்தம் எது?
      ......
   b. ஓசோன் படையைப் பாதிக்கும் காரணிகள் 3 தருக.
      1) ......
      2) ......
      3) ......
3) a. நீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டியவர்கள் அதனை சில சமயம் பாரிய அளவுகளில் தெரிந்தே மாசுபடுத்துகிறார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்கள் 2 தருக.
      1) ......
      2) ......
   b. மண்ணின் pH பெறுமானம் என்பதனால் நீர் கருதுவது யாது?
      ......
      ......
4) a. மண்ணின் வகைகளைக் குறிப்பிடுக.
      1) ......
      2) ......
      3) ......
   b. எமது முன்னோரிலும் பார்க்க தற்போதைய மக்களுக்கு அதிகமாக பாரதூரமான நோய்கள் உருவாகின்றன. இதற்கான காரணங்கள் 2 தருக.
      ......

மறுபக்கம் பார்க்க....

ஆசிரியர்: G.ஜெயானந்தன்,
கோணகல தமிழ் மகா வித்தியாலயம்,
பதுளை. தொ.பே.இல: 072-4684299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைக் கட்சிகளை ஒழிக்க அரசாங்கம் திட்டம்



கடந்த திங்கட்கிழமை இரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட விசேட கூட்டத்தில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆற்றிய விளக்க உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் தலைப்புச் செய்தியாக வெளியாகியிருந்தது தெரிந்ததே. உரையின் எஞ்சிய பகுதி இன்று இங்கே பிரசுரமாகிறது.

எமது கட்சியை யாரும் 'திரீவீலர்' கட்சி என்று கூறமுடியாது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடுத்ததாகப் பலமான ஒரு கட்சியாக விளங்குவது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான். ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கூறுவதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு ஒரு வகையில் ஏற்புடையதுதான். ஏனெனில், கட்சிகளைச் சிதைத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பறித்து எடுப்பது ஜனாதிபதியே. நாம் எமது 6 உறுப்பினர்களை ஜனாதிபதியிடம் இழந்தோம். ஐ.தே.க. 26 பேரை இழந்தது. அரசின் பெரும்பான்மை இவ்வாறு பறித்தெடுக்கப்பட்டவர்களினால்தான் ஏற்பட்டு இருக்கிறது. அதனால்தான் அரசுக்கு இன்று பெரும்பான்மைப் பலம் இல்லை என்கிறோம். எனவேதான், நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

## இராணுவத் தளபதி பொது வேட்பாளர் என்றதும் அரசுக்குப் பயம் வந்து விட்டது...

### பெரும்பான்மைப் பலம் அரசுக்கு இருக்கிறதா?

இராணுவத் தளபதி, தேர்தலுக்கான பொது வேட்பாளராக வருவாராக இருந்தால் அவருடன் நேரடியாகப் பேச்சு நடத்திய பின்பே அவருக்கு ஆதரவு அளிப்பதா, இல்லையா என்பது குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் எடுக்கும். அதற்கு முன்பு எம்மால் இவ்விடயத்தில் உடன்பட முடியாது.

ஒரு காலத்தில் ஜனாதிபதி முறைமை இருந்தால் நல்லது என்று நம்பிய சமயமும் இருந்தது. ஆனால் இன்று அப்படி இல்லை. சிறுபான்மையினரையும் அவர்களின் கட்சிகளையும் ஒழித்துக் கட்டுவதற்கே இன்று அந்த முறைமை பயன் படுத்தப்படுகிறது.

தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதன் நோக்கம் பலவீனப்படுத்தப்பட்ட நம் அரசியலை நிமிர்த்துவதற்கே ஆகும். சிலருக்கு அரசுடன் இணைவதன் மூலம், நிமிர்த்த முடியும் என்ற எண்ணம் இருந்தது. அது பற்றியும் நாம் ஆராய்ந்தோம். பொதுவேட்பாளர் யார் என்பது இன்னும் தெளிவாகவில்லை. அவர் இன்னும் களத்துக்கும் வரவில்லை வந்த பின் அவருடன் பேசி முடிவெடுப்பதே சிறந்தது. அதே நேரம், தற்போதைய ஜனாதிபதிதான் வெல்லுவார் என்றால் அவரை எதிர்ப்பதிலும் பயனில்லை. எவ்வாறாயினும், பாதிக்கப்பட்டிருப்பவர்கள் நாம் அனைவருமே ஆவோம். எனவேதான், பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டியிருக்கிறது.

### சிறுபான்மைக் கட்சிகளை ஒழிக்க அரசு திட்டம்

தற்போதைய ஜனாதிபதியுடன் எமக்குத் தனிப்பட்ட குரோதங்கள் எவையும் இல்லை. ஆனால் அவர் வகிக்கும் பதவி என்பது ஒரு பெரிய நிறுவனம். அந்த நிறுவனத்தைத் தொடர்ந்தும் நம்ப முடியுமா என்ற கேள்வியின் அடிப்படையில் அப்பதவி முறைமை குறித்து நாம் தீவிரமாக ஆராய்ந்தோம். அந்தப் பதவி முறைமைகளில் உள்ள குறைபாடுகளை நாம் கடந்த காலங்களில் கண்டோம். அந்த முறைமையை மாற்றுவது குறித்தும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த ஜனாதிபதி முறைமையின் கீழ் வரும் தற்போதைய ஜனாதிபதி தனது அதிகாரங்களைக்கொண்டு, உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்தமையை நாம் மறக்க முடியாது. இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் கட்சிகளை வைத்திருக்க முடியாது என்றும் சட்டம் இயற்ற முயன்றதும் இந்த ஜனாதிபதி முறைமையின் கீழேயே. சிறிய சிறுபான்மைக் கட்சிகளை ஒழித்துக் கட்டு வதே அதன் உள் நோக்கமாக இருந்தது. இதற்கு எதிராக நாம் வழக்குத் தாக்கல் செய் ததால் தான் நாம் தப்பி இருக்கிறோம்.

மிகப் பெரிய நிறுவனமாக உள்ள ஜனாதிபதி முறைமையை மாற்றுவதே எமது இலக்காகும். பொது வேட்பாளர் என்பது அல்ல. பொது வேட்பாளர் பற்றிய முடிவு அவருடன் பேசிய பின்பே எடுக்கப்பட முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். இராணுவத் தளபதி பொது வேட்பாளராக வருகிறார் என்றவுடன் அரசுக்குப் பயம் வந்து விட்டது.

முன்னாள் இராணுவத் தளபதி பொது வேட்பாளராக வருவது பிரச்சினை என்றால் அரசு ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருக்கவேண்டும்.

நாம் எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் சேராமல் இருந்திருந்தால் இன்றுள்ள நிலைமை ஏற்பட்டிருக்காது. அப்படி சேராதிருந்திருந்தால் எமது கட்சியின் பிரயோக வலு அரசுக்குத் தெரிய வந்திருக்காது. இதன் காரணமாக, இப்போது முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் எல்லாம் எம்முடன் பேச்சு நடத்தி வருகிறார்கள். அரசு சம்பந்தப்பட்ட பல இரகசியமான விடயங்களை எமக்குத் தெரிவித்து, அதனை நடக்க விடாமல் பார்த்துக்கொள்ளும்படி எம்மிடம் கோரிக்கை விடுக்கிறார்கள். எம்மை அழிக்க எதிர்பார்த்திருக்கும் இவர்களின் ஒரு படையே அரசில் இருக்கிறது. நாம் அரசதரப்புடன் சேர்ந்து விட்டால், அவர்களுக்கெல்லாம் புது வாழ்வு கிடைத்துவிடும் என நம்புகிறார்கள்.

### மு.காவையும் கூட்டமைப்பையும் பிரிக்க அரசு முயலும்

எமது இலக்கு எதிர்பாராத விதமாக பிழைத்து விடுமாயின் நிச்சயமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலும், தமிழ் கூட்டமைப்பிலும் அரசு பிளவை ஏற்படுத்த முயலும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, எமது பிரயோக வலுவை சக்திமிக்கதாக நாம் ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

புலிகள் வெற்றியடைந்தால், தங்களுக்கு சமத்துவம், நிம்மதி கிடைக்காது என தமிழ் புத்தி ஜீவிகளும், மக்களும் அறிந்திருந்த போதிலும் - புலிகளின் வெற்றி தமிழர்களின் வெற்றியாக இருக்காது என்று தெரிந்திருந்த போதிலும் - புலிகளின் தோல்வி, தமிழர்களின் தோல்வியாகிவிடும் என்பதால்தான், தமிழர்கள் புலிகளை ஆதரித்தார்கள் என்ற கருத்தை நான் இங்கு நினைத்துப் பார்க்கின்றேன்.

அந்தவகையில் எமது முயற்சியில் தோல்வி ஏற்படுமாயின், அது நம் அனைவரினதும் தோல்வியாகி விடலாம். நாட்டில் ஜனநாயகமே சவாலுக்கு உள்ளாகி இருக்கிறது. சட்டமும், ஒழுங்கும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. சிறந்த ஜனநாயகத்தில் சக்திவாய்ந்த எதிர்க்கட்சியின் அவசியம் மறுக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியை ஒழிக்க இடமளிக்க முடியாது. சகல சிறுபான்மைக் கட்சிகளும், சிறிய கட்சிகளும் ஆபத்தான சூழ்நிலையை எதிர்நோக்கியிருக்கின்றன. எனவே, ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே நாம் முயற்சிக்கிறோம். அரசியலில் நிலவிய சமச்சீரற்ற போட்டித் தன்மையை நீக்கி அரசியல் சமப்படுத்தலைச் செய்வதன் மூலமே ஜனநாயக விரோத சக்திகளை முறியடிக்க முடியும். *

---

# பரீட்சையில் சித்தியடைவேன் என்ற நம்பிக்கை இருந்த போதும் 175 புள்ளிகள் பெற்றுச் சாதனை படைப்பேன் என எண்ணவில்லை

வன்னியில் இடம்பெற்ற போரழிவுகளுக்குள் சிக்கி நாளுக்கு நாள், இடப்பெயர்வுகளைச் சந்தித்து உயிர் மட்டும் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்துடன் அங்கிருந்து வெளியேறி வவுனியா அருணாசலம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்ட புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சொந்த இடமாகவும் தற்போது யாழ்.பழைய பூங்கா வீதியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மாணவி செல்வி செலஸ்ரின் சதுர்சியா 2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப்பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

தற்போது சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இணைந்து கல்வியைத் தொடருகின்ற செல்வி சதுர்சியாவின் வியத்தகு சாதனையின் கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகிறோம் படியுங்கள்:

எனது அப்பா கமம் செய்பவர். அம்மா வீட்டுப் பணி செய்பவர். நான் தரம் நான்கு வரை புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்றேன்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் வென்ற மாணவி சதுர்சியா உதயனுக்கு வழங்கிய செவ்வி

சந்திப்பு: கவிநேசன்.

வன்னியில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் புதுக்குடியிருப்பிலிருந்து இடம்பெயர்ந்து இறுதியாக புதுமாத்தளன்வரை சென்றோம்.

இதனால் எனது கல்வி மேலும் தொடர முடியாத வகையில் சீர் குலைந்தது. புத்தகத்தை ஒரு நாள் கூட திறந்து படிக்க முடியாத மனநிலையில் நாம் இருந்தோம்.

எனது அப்பா எமது பாதுகாப்புக்காக சுமார் எட்டு பங்கர்கள் அமைத்திருந்தார். பங்கர்தான் எமது வாழ்விடம். முதலாவது பங்கருக்குள் பதுங்கியிருந்த போது படிப்போம் என்று புத்தகத்தைக் கையில் எடுத்தால் மனநிலை இடம் கொடுக்கவில்லை. ஏனெனில் அக்கம் பக்கம் எங்கும் அவலக் குரல்களே ஒலித்த வண்ணம் இருந்தன.

புதுமாத்தளன் பகுதியில் இறுதியாக தங்கியிருந்த போது நாம் உயிர் பிழைப்போமா? என்ற ஏக்கம் இருந்ததே தவிர படிப்பைப் பற்றிச் சிந்தித்ததேயில்லை. ஏதோ இறைவனின் செயலால் உயிர்பிழைத்தோம்.

அங்கிருந்து எங்களை வவுனியா நலன்புரி நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். புலமைப் பரிசில் பரீட்சைக்கான காலம் நெருங்கிவிட்டது. ஆக நான்கு மாதங்கள்தான் இருந்தன.

முடியுமானவரை படிப்போம் என்று பாடப்புத்தகத்தைத் தேடினால், அது இல்லை. ஒரு புத்தகம் தருவார்கள் அது எம்மிடம் மூன்று நாள்களுக்கு மட்டும் இருக்கும். பின்னர் சக மாணவியிடம் கொடுக்க வேண்டும். இவ்வாறு சுழற்சி முறையில்தான் பாடப்புத்தகங்களைப் படிக்கமுடிந்தது.

முகாமில் இருந்து படிப்பதற்கு ஆரம்பத்தில் கதிரைகள் இல்லை. தரையிலும் மரத்தின் கீழும் கை விளக்கில்தான் படித்தேன்.

பின்னர் ஒரு மாத காலத்துக்குள்தான் கதிரையில் இருந்து படிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அகதி முகாம்களுக்குப் பொருத்தப்பட்டுள்ள பொது மின்விளக்கில், மரத்தின் கீழ் இருந்து இரவு 9 மணி வரையும் படித்தேன்.

நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த போது பார்த்தீபன் ஆசிரியர் எனக்கு விசேடமாக பாடங்களைச் சொல்லித்தந்தார். அவருக்கு இந்த நேரத்தில் எனது நன்றிகளை 'உதயன்' ஊடாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவேன் என்ற நம்பிக்கையிருந்தது. ஆனால், இவ்வாறு 175 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடத்தைப் பெறுவேன். என்று எதிர்பார்க்கவில்லை இதனை நினைத்துப் பார்க்கும் போது, நான் யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் தேசிய ரீதியிலே முதலிடத்தைப் பெற்றிருப்பேன் என்ற எண்ணம் எனக்கு இப்போது தோன்றுகிறது.

யாழ்ப்பாணம் வந்த பின்னர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இணைப்பதற்கு என்னை அழைத்துச் சென்றபோது கல்லூரியின் அதிபர் திருமதி ரி.துஷ்யந்தினி இன்முகத்தோடு வரவேற்று இடமளித்துள்ளார். அவருக்கும் இத்தகைய சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகிறேன்.



தனது குடும்பத்தாருடன் செல்வி சதுர்சியா

எனது எதிர்கால இலட்சியம் ஆசிரியராக வரவேண்டும் என்பதே. அவ்வாறான புனிதப் பணியில் எதிர்காலத்தில் என்னை இணைத்துச் சமூகத்திற்குச் சேவையாற்ற வேண்டுமென்பது எனது சிறு வயதுக் கனவு. அது நிறைவேற வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு

எதிர் பார்ப்புக்கள் இன்றி - பழகினோம்
பல நாள்கள் முகம் தெரியாமல்
சிரித்துப் பேசி விட்டு - இன்று
விடைபெறும் தருணத்தில்
ஏனோ சந்தோசங்களும் சிரிப்புகளும்
எங்கோ? ஒளித்துக்கொண்டன!
வசந்த காலம் ஓர் நாள் மீண்டும்
வரும் என்ற நம்பிக்கையில்!
தீராத நணங்களும் ஊமைக் காயங்களும் கண்ணீருடன்
கரைந்து போக! இந்த பிரிவிலும்
ஓர் சந்தோசம் நான் இறந்தாலும்
உன்னுடன் வாழ்வேன் என்ற திடந்தான்!

ம.ஜீவஜெர்சினி,
மானிப்பாய்.



## நீயே என் சுவாசம்

பனி சிந்தும்
செவ்வந்தியே!
எழிலின் இமயமே!
என் நினைவினில்;
நிறைந்து விட்டாய்!

நிலவே...... நீ
கனவின் உணர்வாகி
வசந்தம் தந்து;
வாழ்வின் துணையாகி
வா!

கவிதை நீயே;
தென்றல்!
அதுவே என்
உள்ளத்தின்
உதிரத்தின்
இதயத்தின் சுவாசம்

இ.கோபிரூபன்
தென்புலோலியூர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மின்னல்" ஏற்படுவது பற்றிய சில தகவல்கள்

மின்னல் என்பது, மின் ஊட்டம் பெற்ற காற்று மண்டலத்தின் குறுக்கு இணைப்பில் ஏற்படும் மின் அதிர்ச்சி

அதனால் மின்னலானது மேகங்களில் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் கிடைமட்டமாகவும் பாயும்.

மின்னல் ஒரு விநாடிக்கு, சுமார் 1600 ஓட் வேகத்தில் பாயக்கூடியது. அதைச்சுற்றியுள்ள, காற்றை 33,000°C அளவுக்கு சூடாக்குகின்றது. இக்காற்று விரிவடைந்து ஒன்றோடு ஒன்று பலத்த சத்தத்துடன் மோதிக் கொள்கின்றது.

இதைத்தான் இடி மின்னல் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒளியின் வேகம் விநாடிக்கு 2,97,600.ஓட்.ஒலியின் வேகம் விநாடிக்கு 330m ஒரேசமயத்தில் நிகழ்ந்தாலும் மின்னலுக்குப் பின்னரே இடிச்சத்தம் கேட்பது இதனால் தான்.

அமெரிக்காவில் பெஞ்சமின் ஃபிராங்க்லின் தான் மின்னல் உண்டாவதற்கு மின்சாரம் தான் காரணம் என்று கண்டுபிடித்தார். இவர் ஒருமுறை இடியும், மின்னலும் இருந்த ஒரு சமயத்தில் ஒரு காற்றாடியை உயரத்தில் பறக்கவிட்டு, கையில் உள்ள நாலில் ஒரு சாவியையும் இணைத்தார். மின்னல் மின்னியதும் அவருக்கு சிறிய மின் அதிர்ச்சி ஏற்பட்டதை உணர்ந்தார்.

துப்பாக்கிக் குண்டு பாய்வதைப் போன்று 30,000 மடங்கு வேகத்தில் பாய்கிறது மின்னல். மின்னல்களில் 85 சதவீதம் நிலத்தின் மீது தான் விழ்கின்றன. கடலில் விழ்வது குறைவு.


மின்னலில் நைதரசன் பெருமளவில் இருக்கின்றது. மின்னல் இல்லாவிட்டால், தாவர வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படும். மின்னல் ஒரே இடத்தைப் பல தடவைகள் தாக்கக்கூடும். சுவிற்சர்லாந்தில் உள்ள ஒரு மலையை 100 தடவை மின்னல் தாக்கியது.

பூமியின் மத்திய ரேகைக்கு அருகில் உள்ள நாடுகளையே மின்னல் அதிகமாகத் தாக்குகின்றது.

இடிதாங்கி என்னும் "மின்னல் கடத்திகளை" உயரமான கட்டடங்களில் பொருத்திவிட்டால் அதன் வழியாக மின்னலின் மின்சக்தி, பூமிக்குப் போய்விடும். கட்டடங்களைப் பாதிக்காது. இதைக் கண்டுபிடித்தவரும் பெஞ்சமின் ஃபிராங்க்லின் தான். விமானம் மேகங்களுக்கு மேலாகப் பறப்பதால் மின்னல், இடி, மழையின் போது அதற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. விமானத்தில் இருந்து பார்த்தால் வானத்தில் "வானவேடிக்கை" நிகழ்வதைப் போன்று இருக்கும்.

மரங்களில் 'ஓக்' மரத்தின் மேல் தான் அடிக்கடி மின்னல் தாக்குவதைக் கண்டறிந்துள்ளார்கள். மின்னல் தாக்கி மரங்க்ள் அழியாமல் இருக்க சிங்கப்பூரில் முக்கிய இடங்களில் மரங்களில் இடிதாங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன.

தொகுப்பு: ஜெயரூபன்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் கூட்டுறவுநகர் இளவாலை வடக்கில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். வே.சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அலன்ரின் சில் வெஸ்ரர் (உதயன்) ஆகியோர் இணைந்து நாடாவெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

கிளைக்குழு உறுப்பினர் கு.சிவகௌரி, தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் பொது முகாமையாளர் சி. நாகேந்திரம் ஆகியோர் உரையாற்றுவதையும் விருந்தினர்களையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம்.


## தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் இரண்டு அல்லது மூன்று அறைகள் உடைய வீடு தேவை. (அலுவலக உபயோகத்திற்கு)
உடனடித் தொடர்பு: 077 1175854, 077 2208258 (90886)


## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்.அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீர கத்திப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு விநாயகப் பெருமானுக்கு விசேட சகஸ்திர சங்காபிஷேக நிகழ்வு இடம்பெற உள்ளது. பிற்பகல் 4 மணிக்கு முருகப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெற்று வசந்த மண்டபப் பூஜையுடன் முருகப் பெருமான் வள்ளி -தெய்வானை சகிதம் உள் வீதி வலம் வருவர் (14-15)

## மரண அறிவித்தல்

### தருமலிங்கம் பொன்மலர்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் பொன்மலர் நேற்று (11.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சௌந்தரம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற அப்பையா தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தேவகி (வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.ச.,நீர்வேலி), ஜானகி (பொறுப்பதிகாரி, வ.கி.பி.சபை - உப அலுவலகம், உரும்பிராய்), மயூரன் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயபாலன், கணேசலிங்கம், தர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் கணேஷ்ராம், லேமிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். கு.சதானந்தன் (பேக்கரி மாமா, சதா பேக்ஹவுஸ்) (90883)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும் அப்பதிவுப் புத்தகம் 2009ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக் கூடாது.
4. கேள்விப் பத்திரங்கள் வழங்கல் 12.11.2009ஆம் திகதியிலிருந்து 17.11.2009ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 18.11.2009ஆம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 11 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
5. கேள்விப் பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணங்களை யாழ்ப்பாண கல்வி வலய கணக்குப் பகுதியில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களைப் பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும்.
6. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விவரம் | மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் | மீளளிக்கக் கூடிய பாதுகாப்பு வைப்பு | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 1. யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பாடசாலைக் கட்டடத் திருத்த வேலை | 500.00 | 18400.00 | C9,(M8,M9) |
| 2. யா/கொழும்புத்துறை இந்து ம.வி. பாடசாலைக் கட்டடத் திருத்தம் | 500.00 | 10600.00 | C9,(M8,M9) |
| 3. யா/முத்துத்தம்பி வித்தியாலயம் மலசலகூட கட்டட நிர்மாணம் | 250.00 | 1500.00 | C9,(M8,M9) |
| 4. யா/பெரியபுலம் ம.வி. மலசலகூட கட்டட நிர்மாணம் | 250.00 | 1500.00 | C9,(M8,M9) |
| 5. யா/சென்.பெனடிக் றோ.க.வித்தியாலயம் வகுப்பறைத் திருத்தம் | 250.00 | 1500.00 | C9,(M8,M9) |

6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்றை மூலப் பிரதியாகவும் மற்றையதனை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
7. கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப் பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறையும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம். என விலாசமிட்டு வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 18.11.2009ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குமுன் இடப்பட வேண்டும்.
8. குறித்த நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்க முடியும்.

திருமதி அ.வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம். (சி/562253)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி B, கட்டுரை வினாக்கள்

* உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு வினாவைத் தெரிவுசெய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.

01.





மனிதனில் புறச்சூழல் மாற்றங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அமைப்பு ஒன்று மேலே காட்டப்பட்டுள்ளது.

1) 1. மேற்படி உருவில் A - E வரையிலான பகுதிகளைப் பெயரிடுக.
   2. மேற்படி உருவினால் அமைக்கப்பட்ட தொகுதியினைப் பெயரிடுக.
2) 1. கணத்தாக்கம் என்பதனால் நீர் விளங்கிக்கொண்டது யாது?
   2. தெறிவினை ஒன்று நடைபெறுவதற்கான தெறிவில்லை தெறிவில் ஒன்றில் வரைந்து பெயரிடுக.
3) 1. நரம்புத் தொகுதியின் தலைமை உறுப்பு எது?
   2. மேற்படி உறுப்பு பாதுகாக்கப்படும் முறையினைத் தருக.
4) 1. உடற் சமநிலையைப் பேணுவதில் பங்கெடுக்கும் மூளையின் பகுதி எது?
   2. மேலே நீர் கூறிய பகுதி அல்லாது வேறு ஒரு பகுதியைத் தருக.
   3. உடலில் நடைபெறும் இச்சையின்றிய செயற்பாடுகளை ஆளும் மூளையின் கூறு எது?
5) 1. உடலில் உள்ள வாங்கி அங்கங்களினால் பெறப்படும் தூண்டல்களை மூளைக்குக் கடத்தும் பிரதான அமைப்பு எது?
   2. முள்ளந்தண்டென்பு பாதிக்கப்படுவதால் ஒருவரின் உடல் இயக்கம் பாதிக்கப்படும் முறையினைக் கூறுக.
6) மனிதனில் ஏற்படும் பார்வை குறைபாடுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றுக்கான பரிகார நடவடிக்கையை கதிர் வரிப்படம் மூலம் காட்டுக.
7) இரசாயன இயைபாக்கத்தில் பங்கெடுக்கும் சுரப்பிகளையும் அவற்றின் சுரப்புக்களையும்,தொழிலையும் அட்டவணை ஒன்றில் தருக.
8) 1. மனிதனின் ஒருசீர்திட நிலை என்றால் என்ன?
   2. மேலே நீர் கூறிய ஒரு நிபந்தனை சீர்செய்யப்படும் முறையினை விளக்கிக் கூறுக.
9) மனிதனில் உயிர்த்தொழிற்பாட்டில் நீரின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுக.
10) தாவரங்கள் ஒளிக்கு உறுத்துணர்ச்சி உடையவை என்பதனைக் காட்டுவதற்கு எளிய பரிசோதனை ஒன்றை முன்வைக்குக.

02. மனிதனில் போசணை மூலக்கூறுகளையும் வாயு மூலக்கூறுகளையும் கொண்டு செல்வதற்காக குருதிச் சுற்றோட்டத்தொகுதி அமைந்து காணப்படுகிறது.

1) 1. குருதியில் காணப்படும் திண்மக் கூறுகள் மூன்றினையும் தருக.
   2. குருதியின் திரவவிழையத்தில் அதிகமாக காணப்படும் மூலக்கூறு எது?
2) 1. சுகதேகி மனிதன் ஒருவனில் செங்குழியங்களுக்கு வெண்குழியம் என்ன விகிதத்தில் அமைந்துள்ளது?
   2. செங்குழியங்களின் உற்பத்தித் தானத்தையும் ஆயுட்காலத்தையும் குறிப்பிடுக.
3) 1. குருதியில் காணப்படும் கழிவுகள் எவை?
   2. குருதியில் காணப்படும் கழிவுகள் எங்ஙனம் பிரித்தெடுக்கப்படுகின்றன?
4) 1. கார்ல்ஸ் லான்ஸ்ரைனர் குருதியை எத்தனை வகையாகப் பிரித்தார்?
   2. மேலே இனம் காணப்பட்ட குருதியினங்கள் எது எதனுடன் குறுக்குப் பாய்ச்சல் செய்யமுடியும்.
5) இரட்டைக் குருதிச்சுற்றோட்டம் என்றால் என்ன?
6) 1. குருதிச்சுற்றோட்டத் தொகுதியில் காணப்படும் குருதிக் கலன்களைக் குறிப்பிட்டு அவற்றை ஒப்பிட்டுக் காட்டுக.
   2. இதயத்துடன் நேரடித் தொடர்பில்லாத குருதிக்கலன் எது?
7) 1. குருதிச்சுற்றோட்டத் தொகுதியுடன் தொடர்புடைய நோய்கள் 4 தருக.
   2. மேலே நீர் கூறிய நோய் ஒன்றுக்கான அறிகுறிகள், தொற்றும் நோய் எனின், தொற்றும் விதம் என்பவற்றைத் தருக.

03. தரம் 10 மாணவன் ஒருவன் ஆய்வுகூடத்தில் நுழைந்தபோது கீழே உள்ளது போன்ற உபகரணத் தொகுதி ஒன்றைக் கண்டான்.




1) a. இத் தொகுதி எப்பரிசோதனைக்காக அமைக்கப்பட்ட அமைப்பாகும்?
   b. அவனது கருத்திற்கமைவாக P-U வரையானவற்றைப் பெயரிடுக.
2) a. இப்பரிசோதனைத் தொகுதியில் நடைபெறும் தாக்கத்திற்கான சமன்செய்த சமன்பாட்டைத் தருக.
   b. இங்கு வெளிவரும் வாயுவை பரிசோதித்து அறிவது எவ்வாறு எனக்கூறுக.
   c. இதுதவிர்த்து வேறு இரு வாயுக்களைச் சோதித்தறியும் முறைகளை முன்வைக்குக.
3) a. மனித முயற்சியின் மூலம் பக்க விளைவாக காபனீரொட்சைட்டு வாயு சூழலை அடையும் முறைகள் 2 தருக.
   b. காபனீரொட்சைட்டு வாயு சூழலில் சேர்வதால் இயற்கை சூழலில் அடையும் மாற்றங்கள் யாவை?
4) ஒட்சிசன் வாயு தயாரிப்பின்போது வளி நீரின் கீழ்முகப் பெயர்ச்சியால் சேகரிக்கப்படும். ஆனால், மேலே தயாரிக்கப்படும் வாயு அவ்வாறு சேகரிக்கப்பட வேண்டியதும் இல்லை; சேகரிக்கவும் முடியாது. இதற்கான காரணத்தை முன்வைக்குக.
5) இரவு வேளையில் அடர்ந்த மரத்தடியில் இருந்தவர் சிறிது நேரத்தில் மூச்சுத் திணறலுக்கு ஆளானதன் காரணம் யாது?

04. இலங்கையில் தற்காலத்தில் கைத்தொழில் தரமான விதத்தில் விருத்தியடைந்து வருகிறது. இதனால் நாட்டிற்கு பல்வேறு வழிகளில் பெரும் பயன் கிடைக்கிறது.

1) a. எமது நாட்டில் காணப்படும் கைத்தொழில்கள் யாவை?
   b. மேற்படி ஒவ்வொரு கைத்தொழிலும் மேற்கொள்ளப்படும் இடங்களைத் தருக.
2) a. சீமெந்து கைத்தொழிலுக்கான பிரதான மூலப்பொருள் மற்றும் ஏனைய பொருட்களையும் பட்டியல்படுத்துக.
   b. சீமெந்து உற்பத்தி மூலப்பொருள் அடங்கியுள்ள பொருட்கள் எவை?
   c. சீமெந்து உற்பத்தி செய்யும் படிமுறைகளைத் தருக.
   d. ஜிப்சம் இடப்படுவதன் நோக்கம் என்ன?
   e. ஜிப்சம் வேறு எத்தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.
3) a. சீமெந்து மூலப்பொருளைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய வேறு உற்பத்திப் பொருட்களைக் கூறுக.
   b. நவீன சுண்ணாம்புச் சூளைக்கும் மரபுவழி சுண்ணாம்புச் சூளைக்கும் உள்ள நன்மை, தீமைகளை எடுத்துக் கூறுக.
4) a. வெளிற்றும் தூள் தயாரிக்கும் முறையைக்கூறுக.
   b. மேற்படி தயாரிப்பில் நடைபெறும் தாக்கத்திற்கான ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.
5) சீமெந்து, சுண்ணாம்பு உற்பத்தியின்போது சூழல் மாசடையும் வழிகளைத் தருக.

05. பார்வை விருத்திக்காக பல்வேறு உபகரணங்கள் ஆய்வுகூடத்தில் காணக்கூடியதாக இருக்கும்.

1) a. ஆய்வுகூடத்தில் காணப்படும் பார்வை விருத்தி உபகரணங்கள் யாவை?
   b. சாதாரண மக்கள் பயன்படுத்தும் பார்வை விருத்தி உபகரணம் 2 தருக.
2) a. பார்வை விருத்தி உபகரணங்களில் பயன்படுத்தப்படும் வில்லைகள் யாவை?
   b. குவிவுவில்லை ஒன்றில் 2F இல் வைக்கப்பட்ட பொருள் ஒன்றுக்கான கதிர் வரிப்படம் ஒன்றை வரைந்து காட்டுக.
3) a. ஒளிமுறிவு என்றால் என்ன? இதன்போது ஒளிக்கற்றை செல்லும் பாதையையும் படுகோணம், படுகதிர், செவ்வன் ஆகியவற்றையும் குறித்துக் காட்டுக.
   b. செவ்வகக் கண்ணாடி அரியம் ஒன்றில் ஏற்படும் ஒளிமுறிவுக்கான கதிர் வரிப்படத்தை வரைக.
4) a. ஒளித்தெறிப்பு என்றால் என்ன?
   b. ஒளித்தெறிப்பு கோட்பாட்டை பயன்படுத்தி செய்யப்பட்ட உபகரணங்கள் யாவை?
5) a. ஒலியின் அலை நீளம் என்பதனால் கருதப்படுவது யாது?
   b. மீடிறன் எனும் பதத்தினால் நீர் விளங்கிக் கொண்டதைத் தருக.
   c. ஒளியின் இயல்புகள் யாவை?
6) a. ஒலி எழுப்பும் பொருட்களைக்கொண்டு அமைக்கப்பட்ட இசைக்கருவிகள் 10 தருக.
   b. மேலே வினா (4-a) இல் நீர் கூறியவற்றை அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்திக் காட்டுக.

06. பொருள் ஒன்று இயங்குவதற்கு தேவையான சக்திமுதல் விசை எனப்படும்.

1) a. இயக்கம் தொடர்பான கருத்தினை முன்வைத்த விஞ்ஞானியின் பெயர் என்ன?
   b. இவர் கூறிய முதலாவது இயக்க விதியைக் கூறுக.
   c. இதற்கு அமைவாக நடைமுறை உதாரணம் 2 தருக.
2) a. பொருள் ஒன்றின் மீது விசை பிரயோகிக்கப்படும்போது பொருளில் ஏற்படும் மாற்றங்களைத் தருக.
   b. உந்தம் என்றால் என்ன?
3) a. உராய்வு விசை என்றால் என்ன?
   b. அன்றாட வாழ்க்கையில் உராய்வு விசை கூட்டி குறைத்து பயனடையும் சந்தர்ப்பங்களை எழுதுக.
4) a. விசையினை பயன்படும் உபகரணங்கள் யாவை?
   b. விசையினை தொழிற்படும் எளிய பொறி வகை எது?
5) கதவு ஒன்றை பிணைச்சலுக்கு அண்மையில் திறப்பதிலும் பார்க்க மறு அந்தத்தில் திறப்பது இலகுவாவதன் காரணத்தைக் கூறுக.

-நிறைவுற்றது-

இன்றைய விஞ்ஞான பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்குவது
NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும் உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் எழுதக்கூடிய தடிப்பம்
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
N0 5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களிடமிருந்து வைப்பினை ஏற்றுக் கொள்வது உள்ளடங்கலாக நிதி வர்த்தகத்தை கொண்டு நடத்துவதற்கு பின்வரும் நிறுவனங்களிற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்டுள்ளது / பதிவு செய்யப்பட்டுள்ளது

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (அகரவரிசைப்படி)

1. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
2. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
3. இந்தியன் பாங்க்
4. இலங்கை வங்கி
5. எம்சிபி பாங்க் லிமிடெட்
6. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
7. கபீப் பாங்க் லிமிடெட்
8. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
9. சம்பத் பாங்க் பிஎல்சி
10. சிற்றி பாங்க் என்ஏ
11. செலான் பாங்க் பிஎல்சி
12. டிஎவ்சீசீ வர்த்தன பாங்க் லிமிடெட்
13. டொயிஸ் பாங்க் ஏஜி
14. நெசனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
15. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
16. கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
17. பப்ளிக் பாங்க் பெர்காட்
18. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
19. மக்கள் வங்கி
20. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்
21. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
22. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (அகரவரிசைப்படி)

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. ஊவா அபிவிருத்தி வங்கி
4. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
5. கந்துரட்ட அபிவிருத்தி வங்கி
6. சப்ரகமுவா அபிவிருத்தி வங்கி
7. சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
8. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
9. டிஎவ்சீசீ பாங்க்
10. தேசிய சேமிப்பு வங்கி
11. ரஜரட்ட அபிவிருத்தி வங்கி
12. லங்காபுத்திர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்
13. வயம்ப அபிவிருத்தி வங்கி
14. றுகுண அபிவிருத்தி வங்கி

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் (அகரவரிசைப்படி)

1. அபான்ஸ் பினான்ஷியல் சேர்விசஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட்
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் லிமிடெட்
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட் (குறிப்பு (அ) பார்க்கவும்)
9. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
10. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
11. கப்பிட்டல் றீச் லீசிங் பிஎல்சி
12. கொமர்சல் கிறடிட் லிமிடெட்
13. சிங்கர் பினான்ஸ் (லங்கா) லிமிடெட்
14. சிலிங்கோ இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் ரியல்டி லிமிடெட் (குறிப்பு (அ) பார்க்கவும்)
15. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
16. சிங்கபுத்ர பினான்ஸ் லிமிடெட்
17. சிற்றிசன்ஸ் டிவெலப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்
18. செலான் மேர்சன்ட் லீசிங் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் கம்பனி லிமிடெட்
22. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
23. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி (குறிப்பு (இ) பார்க்கவும்)
24. த பினான்ஸ் அன்ட் கரன்டி கம்பனி லிமிடெட் (குறிப்பு (ஆ) பார்க்கவும்)
25. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
26. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஷ் லிமிடெட்
27. நெக்ஸ்ற் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் சனசக்தி பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ஸ் லிமிடெட்)
28. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
29.. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
30. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ற் பினான்ஸ் கம்பனி லிமிடெட்(முன்னர் சில்வறீன் பினான்ஸ் கம்பனி லிமிடெட்)
31. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
32. மர்ச்சன்ட் கிறடிட் ஒப் சிறிலங்கா லிமிடெட்
33. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
34. வெலிபல் பினான்ஸ் லிமிடெட்
35. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

**குறிப்புகள்:**

(அ) **ஏசியன் பினான்ஸ் லிமிடெட் மற்றும் சிலிங்கோ இன்வெஸ்ட்மென்ற் அன்ட் றியாலிட்டி லிமிடெட்** - நாணயச் சபை 2009 செத்தெம்பர் 01ஆம் திகதி தொடக்கம் மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சியினை இவற்றின் முகாமைத்துவ முகவராக நியமித்துள்ளது.

(ஆ) **த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட்** - நாணயச் சபை 2009 மார்ச்சு 31ஆம் திகதி தொடக்கம் மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சியினை இதன் முகாமைத்துவ முகவராக நியமித்துள்ளது.

(இ) **த பினான்ஸ் கம்பனி லிமிடெட்** - நாணயச் சபை 2009 மே 22ஆம் திகதி தொடக்கம் மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சியினை இதன் முகாமைத்துவ முகவராக நியமித்துள்ளது.

**இதற்கு மேலதிகமாக, 1972 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்க சட்டம் இல. 5 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் கண்காணிக்கப்படுவதுமான கூட்டுறவு சங்கங்கள், பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டவையாகும்.**

**பின்வரும் நிறுவனங்கள் அரச பிணையங்களை (உ-ம்: திறைசேரி உண்டியல்கள்/திறைசேரி முறிகள்) கையாள்வதற்காக (வாங்கல்/விற்றல்/மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை பொறுப்பேற்றல்) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்டிருக்கின்றன.**

## முதனிலை வணிகர்கள் (அகரவரிசைப்படி)

1. அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் (முன்னைர் எச்என்பி செக்குரிட்டீஸ் லிமிடெட்)
2. இலங்கை வங்கி (முதனிலை வணிகர் பிரிவு)
3. என்றஸ்ட் செக்குரிட்டீஸ் லிமிடெட் (முன்னைய சிலிங்கோ சிறிராம் செக்குரிட்டீஸ் லிமிடெட்)
4. என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட்
5. கப்பிட்டல் அலையன்ஸ் லிமிடெட்
6. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி (முதனிலை வணிகர் பிரிவு)
7. சம்பத் பாங்க் பிஎல்சி (முதனிலை வணிகர் பிரிவு)
8. செலான் பாங்க் அஸட் மனேஜ்மன்ட் லிமிடெட்
9. நட்வெல்த் செக்குரிட்டீஸ் லிமிடெட்
10. மக்கள் வங்கி (முதனிலை வணிகர் பிரிவு)
11. பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடெட்

**குறிப்புக்கள்:**

**இவற்றிற்கு மேலதிகமாக, பொதுமக்கள் பின்வரும் இடங்களில் அரச பிணையங்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.**

> உரிமம் பெற்ற எந்தவொரு வர்த்தக வங்கி
> ராஜகிரியவிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள நட்வெல்த் செக்குரிட்டீஸ் லிமிடெட்டின் சில்லறை விற்பனைப் பீடம்
> லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டின் பிராந்திய காரியாலயங்கள்

**எச்சரிக்கை –**

1. **அதிகாரமளிக்கப்படாத அத்துடன்/ அல்லது ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிதியியல் நிறுவனங்களில் உங்கள் பணத்தை வைப்புச் செய்யவோ அல்லது முதலீடு செய்யவோ வேண்டாம்.**
2. **அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமாக இருப்பினும் கூட பொதுமக்கள் அவற்றின் இடர்நேர்வுகளையும் இலாபங்களையும் கவனத்திலெடுக்க வேண்டும்.**
3. **இவ் வெளியீட்டில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள வங்கிகளில் மற்றும் ஏனைய நிறுவனங்களில் பொதுமக்கள் தமது பணத்தினை வைப்பு செய்யவோ அல்லது முதலீடு செய்யவோ இலங்கை மத்திய வங்கி விதந்துரைக்கின்றது என்று பொருள் கொள்ளலாகாது.**

**மேலதிக விசாரணைகளுக்கு**

> வங்கி மேற்பார்வைத் திணைக்களம் - தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477116 தொலைநகல்: 2477711 மின்னஞ்சல்: banksup@cbsl.lk
(உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தொடர்பாக)
> வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் - தொலைபேசி: 2477500, 2477503 தொலைநகல்: 2477738 மின்னஞ்சல்: snbfi@cbsl.lk
(பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பாக)
> பொதுப் படுகடன் திணைக்களம் - தொலைபேசி: 2477316, 2477273, 2477011 தொலைநகல்: 2477718/19 மின்னஞ்சல்: pdebt@cbsl.lk
(முதனிலை வணிகர்கள் மற்றும் அரச பிணையங்கள் தொடர்பாக)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பழவகைகளைப் பதனிடும் பயிற்சி

## 20 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.12

குடாநாட்டில் உற்பத்தியாகும் பழங்களைக்கொண்டு நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் 5 வகையான உணவுப் பதார்த்தங்கள் உற்பத்தியாக்குவதற்கான விசேட பயிற்சிகள் 20 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரி எஸ்.சுதர்சன் இத்தகவலைத் தெரிவித்தார்.

விதாதாவள நிலையத்தின் பொறுப்பதிகாரியான எஸ்.சுதர்சன் மேலும் தெரிவிக்கையில்:

குடாநாட்டில் உள்ள வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதே விதாதா வள நிலையத்தின் நோக்கமாகும்.

இதன் முதற்கட்டமாக 'ஜாம்' உற்பத்தி, கோடியல், பழச்சோடா, உலர்த்தப்பட்ட பழத்துண்டுகள், தக்காளி சோஸ் என்பனவே இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் ம.ஜெகூ இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தார்.

வளஆளணியினராக கோப்பாய் பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரி பி.பகீரதன், நல்லூர் பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரி எம்.தவேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

மேற்படி பழங்கள் மூலம் பதனிடும் பயிற்சி நெறியின் இரண்டாம் கட்டம் விரைவில் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (50-302)

# மண்புழுவினைப் பயன்படுத்தி சேதனப்பசளை உருவாக்கத்திட்டம்

யாழ்ப்பாணம்,நவ.12

வலி.தென்மேற்கு - விதாதாவள நிலையம் ஊடாக நவீன தொழில்நுட்பத்தின் கீழ் மண்புழுவினைப் பயன்படுத்தி சேதனப் பசளை உருவாக்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக விதாதா வள நிலைய விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரி எஸ்.சுதர்சன் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடமும், வலி.தென்மேற்குப் பிரதேச செயலகமும் இணைந்து சேதனப் பசளை தொடர்பான விளக்கத்தினைக் குறிப்பிட்ட 50 விவசாயிகளுக்குப் பயிற்சிப்பட்டறை மூலம் விளக்கவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.மிகுந்தன் இதற்கான பயிற்சிகளை நவீன தொழில்நுட்ப முறைகளின் கீழ் விளக்கவுள்ளார்.

எதிர்காலத்தில் அசேதனப் பசளைப் பிரயோகத்தினை முற்றாக நீக்கி சேதனப் பசளைப் பிரயோக முறையை வலி.தென்மேற்கில் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்துவதே இதன் நோக்கம் என விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரி எஸ்.சுதர்சன் தெரிவித்தார். (50-302)

# பருத்தித்துறை நகரப்பகுதியில் சில வீதிகளைத் திறக்க நடவடிக்கை

வடமராட்சி,நவ.12

பருத்தித்துறை நகரிலிருந்து கடற்கரை வீதி வழியாக இடம்பெற்றுவரும் பஸ் சேவை அவ்வழியாகச் செல்வதற்கு வசதியாக நகரில் உள்ள சில வீதிகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நகரிலிருந்து கடற்கரை வீதி வழியாக முன்னர் இடம்பெற்று வந்த பஸ் சேவைகள் மீண்டும் அதே வழியாக நடைபெறுவதற்கு வசதியாக அவ்வீதியையும், மக்கள் பாவனைக்காக நீதிமன்ற வீதியையும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இக்கோரிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பருத்தித்துறை நகரில் உள்ள இவ்விரு முக்கிய வீதிகளையும் மக்கள் போக்குவரத்துப் பாவனைக்குத் திறந்துவிடுவது தொடர்பாக படை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார். (1-236)

## துன்னாலை பாடசாலைக்கு இணையத்தளம்

வடமராட்சி,நவ.12

துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பாடசாலை இணையத்தளத்தில் இணைந்து கொண்டுள்ளது.

www.thunnalai.sch.lk என்னும் இணைய முகவரியில் இணைந்து கொண்டுள்ளது. (50-236)

## கறுக்காய் முருகையன் ஆலயம் புனரமைப்பு

வடமராட்சி, நவ.12

வரணி கறுக்காய் முருகையன் கோயில் புனரமைக்கப்பட்டு வருகின் றது.

இக்கோயிலின் புனரமைப்புப் பணி பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் யுத்தம் காரணமாகப் புனரமைப்புப் பணி தடைப்பட்டது.

தற்போது இப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியேறியதை அடுத்து கோயிலின் புனரமைப்புப் பணி மீளவும் ஆரம்பமாகியுள்ளது. (50-236)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## டெங்கு நோய் பற்றி பாடசாலைகளில் பிரசாரம்

யாழ்ப்பாணம்,நவ.12

பாடசாலை மட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பான பிரசாரம் கடந்த 10ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உயிர்கொல்லி நோயான டெங்கு நுளம்பில் இருந்து மக்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது தொடர்பாக இறுவட்டு மூலம் மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. (50-302)

# பருத்தித்துறை மத்தியஸ்தர் சபை அமர்வு ஒவ்வொரு மாதமும் நடைபெறும்

வடமராட்சி,நவ.12

பருத்தித்துறை மத்தியஸ்தர் சபையின் அமர்வு பிரதி மாதம் தோறும் ஒருநாள் வல்வெட்டித்துறையில் இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சபையின் முதலாவது அமர்வு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது பிணக்குகளைத் தீர்ப்பதற்காக 7 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இம்முறைப்பாடுகளில் 6 முறைப்பாடுகள் காணிப் பிரச்சினை தொடர்பானது. ஏனைய ஒரு முறைப்பாடு பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்புடையதாகும்.

முறைப்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மத்தியஸ்தர்சபை அமர்வில் விசாரிக்கப்பட்டு, பிணக்குகள் தீர்த்து வைக்கப்படும்.

இதேவேளை வல்வெட்டித்துறைப் பகுதி முறைப்பாடுகள், பிணக்குகளை அங்கேயே வைத்து விசாரிக்கப்பட்டு தீர்த்து வைக்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கையை மேற்கொண்டால் வல்வெட்டித்துறை, தொண்டைமானாறுப் பகுதி மக்களின் சிரமங்கள் வெகுவாகக் குறைவடையும் என சில மத்தியஸ்தர்சபை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்து, மத்தியஸ்தர்சபை தவிசாளர் ஆ.வடிவேலு தலைமையிலான மத்தியஸ்தர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கமைய பிரதி மாதந்தோறும் ஒரு ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையில் வைத்து அப்பகுதிகளிலிருந்து வரும் முறைப்பாடுகள், பிணக்குகள், விசாரணை செய்யப்பட்டு தீர்த்து வைக்கப்படும். பிரதி மாதந்தோறும் ஒரு ஞாயிறு தவிர்ந்த, ஏனைய ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் பருத்தித்துறை மத்தியஸ்தர் சபையின் நடவடிக்கைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (50-236)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

வடமராட்சி,நவ.12

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் தராசுப் படிகள் உள்ளிட்ட நிறுத்தல், அளவை கருவிகளுக்கு முத்திரை இடும் பணி ஆரம்பமாகியுள்ளது.

நகரசபை எல்லைக்குள் உள்ள வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன தமது நிறுத்தல், அளவைகள் கருவிகளுக்கு முத்திரை இட்டுக்கொள்ளுமாறு பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.அ.நடராசா தெரிவித்துள்ளார்.

ஆத்தியடியில் உள்ள பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமான முத்திரை இடும் பணி நேற்று புதன்கிழமை தவிர, நாளை வெள்ளிக்கிழமைவரை காலை 9மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-236)

## யாழ்.மாநகர சபையின் சமய அறிவுப் பரீட்சை

நல்லூர்,நவ.12

யாழ்.மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக் குழுவினர் இந்த ஆண்டு நடத்தப்படும் சமய அறிவுப் பரீட்சை நாளை மறுதினம் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என மாநகரசபை ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தற்போது தாங்கள் படிக்கும் பாடசாலைகளிலேயே பரீட்சைகளை எழுதவேண்டும் எனவும் சரவணபவ தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 164 பரீட்சை நிலையங்களில் 12 ஆயிரத்து 164 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

பரீட்சை சிறப்புடன் நடைபெற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பையும் அவர் கோரியுள்ளார். (50-111)

# 120 முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று முன்தினம் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் 120 முன்பள்ளி ஆசிரியர்களை நேற்று முன்தினம் கௌரவித்துள்ளது.

வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தன் தலைமையில் கௌரவிப்பு விழா இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரும், கௌரவ விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி யாழ்.கிளை முகாமையாளர் வி.அருளானந்தம், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகநேசன், மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ.சங்கப் பொது முகாமையாளர் இ.வேல்குமார், சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி கே.சிவசோதி, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அதிகாரி செல்வி அனித்லா செல்வராசா, சமூகசேவை அதிகாரி வே.அருந்தவராசா, பொறுப்பதிகாரி கு.இரட்ணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச தலைவரும் பசுமைப் புரட்சியாளருமான வை.செகராஜசிங்கம் கலந்து கொண்டார். (50-302)

## நாவலடி - ஊரிக்காடு வீதி சேதமடைகிறது

யாழ்ப்பாணம்,நவ.12

உடுப்பிட்டி வடக்கில் நாவலடி - ஊரிக்காடு வீதிக்கு இரண்டாவது தடவை ஊற்றப்படவேண்டிய தார் ஊற்றப்படவில்லை.

இதனால் மேற்படி வீதி புனரமைக்கப்பட்டும் பயனில்லாது அழிவடைந்து செல்கிறது.

இவ்வாறு உடுப்பிட்டி வடக்குப் பிரதேச முன்னேற்ற சங்கத் தலைவர் தே.பிரசாத் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபையின்கீழ் மேற்படி வீதி பதிவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டது.

ஆனால் இரண்டு ஆண்டுகள் முடிவடைந்தும் 2ஆவது கோட் தார் ஊற்றப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (50-302)



லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய கணனிப் பயிற்சி நிலையத்தின் யாழ்.அலுவலகத்துக்கு மேற்படி ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு.கணேசராசா தம்பதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட விஜயத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். கணனிப்பயிற்சி நிலையத்தின் யாழ்.அலுவலகத்தில் கணனிப்பயிற்சி பெற்ற மாணவர் ஒருவருக்கு லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகசபை உறுப்பினர் திருமதி கணேசராசா சான்றிதழ் வழங்குவதையும், பயிற்சி பெற்ற ஒரு தொகுதி மாணவர்களையும் முதல் இரண்டு படங்களில் காணலாம். சாவகச்சேரிக்கு விஜயம் செய்த நிர்வாகசபை உறுப்பினர்கள் லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய கணனிப் பயிற்சி நிலையத்தின் புதிய அலுவலகத்துக்கான பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவின் போது ஆசிரியர்கள் மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்வதையும், மாணவன் ஒருவர் மங்கள விளக்கேற்றுவதையும், அதிபர் இ. இராகவன் நிற்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிக் கோட்டக்கல்வி அதிகாரி வி.அம்பலவாணர் ஆசிரியை ஒருவருக்கு பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: *கர்ணன்.*)


## தேவை

Kumaran Tourist Inn
சுற்றுலா விடுதிக்கு இரவு நேர உதவியாளர் தேவை. வயது 30-50 இற்கு இடைப்பட்ட வராக மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத் தக்கது. சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.
முகாமையாளர்,
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 4531

## மணமகள் தேவை

M.Sc. முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian PR உள்ள சைவ சமயம் 29 வயது, ஏழுச்செவ்வாய், பூசநட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு வைத்தியத்துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.
(90672) தொடர்பு:.0713163508

## விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள சிலைக்ஸ் 2 ஸ்கூட்டர் 500 - விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:.0775241182

## அருள் முருகன் திருமணப்பணியகம்

இங்குள்ள ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், உட்பட பெருமளவு மணமக்களது சகல விபரங்களும் பெற்றோர், உடன் பிறந்தோர் மணமக்களினால் வழங்கப்பட்டவையாகும் எனவே அனைத்தும் நம்பகத்தன்மையுடையவையாகும். எமது சேவைகளது விரிவான விபரங்களுக்கும் மணமக்கள் தெரிவிற்கும் தொடர்பு கொள்ளலாம். இல.03, யாழ். வீதி சிறாம்பியடி லேன், பலாலி வீதி, (உயர் கல்விக் கல்லூரி- ஆரியகுளம் சமீபம்) யாழ்ப்பாணம். தொ.பே: 222 9334


# கல்வி நிர்வாக சேவையில் தகுதியற்றோர் நியமனம்

கொழும்பு, நவ. 11

கல்வி நிர்வாக சேவையிலுள்ள தகுதியற்ற உத்தியோகத்தர்கள் 600 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க கல்வியமைச்சு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது என்ற இலங்கை ஆசிரியர்கள் சேவைச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த 600 பேரும் அரசியல்வாதிகளைப் 'பந்தம்' பிடித்து கல்வி நிர்வாக சேவைக்குள் நுழைந்தவர்கள் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கையை முன்னெடுக்க முயல்கின்றார் என்றும் சங்கம் அதிருப்தியும் கண்டனமும் வெளியிட்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவையில் தகுதியற்றவர்களுக்கு இடமளிப்பதன் மூலமே நாட்டில் கல்வித்துறை வீழ்ச்சி அடைந்து கொண்டு செல்கின்றது என்றும், எனவே அமைச்சர்தான் இந்நிலைமைக்குப் பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளார் என்றும் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

(சி)

# தெல்லிப்பழைக் கோட்டத்தில் இடம்பெற்ற மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், நவ.12

தெல்லிப்பழைக் கோட்டத்தில் இடம் பெற்ற மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:

**பிரிவு I பேச்சு :**
பொ.பிரக்சனா - பன்னாலை சேர். கனகசபை அ.த.க.பாடசாலை, ஜெ.சுகன்யா அளவெட்டி அருணாசலம் வித்தி., பு.கஜேந்தினி - இளவாலை மெய்கண்டான் ம.வி.

**பிரிவு II பேச்சு :** - த.டன்சிகா - மகாஜனக்கல்லூரி, அ.மேரிஸ்ரெய்யா - மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி., த.கவிராஜ் - மல்லாகம் மகா. வித்தி.

**பிரிவு III பேச்சு:**
இ.கஜீபன் - மகாஜனக்கல்லூரி, கு.பிரியா - மல்லாகம் மகா வித்தி., ம.நிருஜா - யூனியன் கல்லூரி.

**பிரிவு I கட்டுரை:**
த.ஜெயதரன் - மகாஜனக்கல்லூரி, அ.ஜெசிங்டன்டினோ - இளவாலை மெய்கண்டான் ம.வி.

**பிரிவு II கட்டுரை:**
சு.சகானா - மகாஜனக்கல்லூரி, பொ.பிரியதர்சினி - பன்னாலை சேர். கனகசபை அ.த.க. பாடசாலை, பு.கஜரூபி - இளவாலை மெய்கண்டான் ம.வி.

**பிரிவு III கட்டுரை:**
தி.அரசாயினி - மல்லாகம் மகா வித்தி., இ.ஸ்ரீவாணி - மகாஜனக் கல்லூரி, ச.அன்ரனி பிரதீஸ் - மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி.

**பிரிவு I தனி இசை:**
ச.அபிராமி - அளவெட்டி அருணாசலம் வித்தி., த.பிரதீபன் - தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தி.

**பிரிவு II தனி இசை:**
ஜெ.கர்ஜினி - யூனியன் கல்லூரி, ப.பகீரதன் - மயிலிட்டி வடக்கு கலை மகள் வித்தி., ந.கோபிகா - சதானந்தா வித்தி.

**பிரிவு III தனி இசை:**
சி.அனோஸ்ரீ [illegible] - [illegible] வித்தி., [illegible]ணன் - அருணோதயாக் கல்லூரி.

**பிரிவு II குழு இசை:**
மகாஜனக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யூனியன் கல்லூரி.

**பிரிவு III குழு இசை:**
மல்லாகம் மகா வித்தி.

**பிரிவு II குழு நடனம்:**
மகாஜனக் கல்லூரி.

**பிரிவு III தனி நடனம்:**
கா.சர்மியா - மல்லாகம் மகா வித்தி.

**நாடகம் திறந்த போட்டி:**
இளவாலை மெய்கண்டான். (203)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
சிவசிதம்பரம் நற்குணலிங்கம்
(SLPS-I)
(யா/கரணவாய் மகாவித்தியாலயம்)

எங்கள் அதிபர் எம்.ஏ படித்தவராம்
எல்லோரும் விரும்பும் பண்பாளர் - அவருக்கு
அதிபர் சேவை வகுப்பு ஒன்றிற்கான
உயர்ச்சி கிடைத்ததனால் உவகை அடைகின்றோம்

முயற்சியால் உயர்ந்த மனிதர் - அவரது
இடையறா வினைத்திறன் விளைவாக
பரீட்சைப் பெறுபேறும் பார்போற்றும்
விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய போட்டியிலும்
அதிரடியாய் முன்னேறி 'ஊர்' போற்றி நிற்கும் கலாசாலை

எங்கள் அதிபர் எம்.ஏ படித்தவராம்
எல்லோரும் விரும்பும் பண்பாளர் - அவருக்கு
அதிபர் சேவை வகுப்பு ஒன்றிற்கான
உயர்ச்சி கிடைத்ததனால் உவகை அடைகின்றோம்
பெருமைகள் பலபெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக் குழு.

(சி/562248)

## அந்தியேட்டி அழைப்பு



பொன்னையா திருச்செல்வம் — பிறப்பு : 04.01.1979
பொன்னையா பத்மாவதி — பிறப்பு : 19.01.1951
செல்வம் சிவசோதி — பிறப்பு : 05.12.1975
இறப்பு : 06.03.2009

அன்புக்கும், பண்புக்கும் பாசத்துக்கும்
உறைவிடமாய் வாழ்ந்தோரே!
எங்கு சென்றீர் தேடுகின்றது - எம் கண்கள்
நீங்கள் வாழ்ந்த இடமெல்லாம்
இன்று சிதறுகின்றது கண்ணீர்த் துளிகள்
கனவாகிப் போன இத்தினத்தில்
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்...

*கடந்த 06.03.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வங்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*குறிப்பு: - எம் நினைவுகளுக்கு அப்பால் இந்நிகழ்விற்கு அழைப்புகள் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(ர/562247)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 ★ 12 ★ 1949



மறைவு 14 ★ 10 ★ 2009

அமரர் சுப்பிரமணியம் இரத்தினகோபால்
*(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர், கிராமசேவையாளர்)*
திதி: ஏகாதசி (13-11-2009)

எம் அன்பின் உறைவிடமே ஆசை அப்பாவே!
எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி முப்பத்தொருநாள் வந்ததுவோ
எம் நெஞ்சம் வேகுதே அப்பா! - உங்கள்
நினைவு எம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காது அப்பா!
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (13-11-2009) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து மு.ப. 11.30 மணியளவில் நடைபெறும் வீட்டுக் கிரியை, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'தம்பலத்தனை'
துன்னாலை வடக்கு,
கரவெட்டி

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும் :
அன்பு மனைவி – நாகேஸ்வரி
அன்பு மகள் – பிரசாந்தி

(சி/562249)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலகிரியில் நிலச்சரிவால் 28 பேர் மரணம்! தமிழகத்தில் மழையால் பலியானோர் 80 ஆக உயர்வு!!

சென்னை, நவ. 12

பலத்த மழை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் பல இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளால், மண்ணில் புதைந்து நேற்றுமுன்தினம் ஒரேநாளில் 28 பேர் இறந்தனர்.

இதையடுத்து தமிழகத்தில் இதுவரை மழைக்குப் புலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. நீலகிரியில் இடைவிடாத கனமழையால், நூற்றுக்கணக்கான இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு, ஏராளமான வீடுகள் இடிந்தன. கொட்டும் மழையிலும் வருவாய், நெடுஞ்சாலை, வனத்துறை மற்றும் தீயணைப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மண்சரிவு ஏற்பட்ட இடங்களில் தோண்ட, தோண்ட சடலங்கள் வருவதால், புதையுண்டவர்கள் எத்தனை பேர் என முழுமையாகத் தெரியவில்லை. கடந்த திங்களன்று ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் உட்பட 14 பேர் பலியாகினர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மட்டும் மண்சரிவுகளில் சிக்கி 28 பேர் இறந்தனர். குன்னூர் நஞ்சப்பன் சத்திரம் என்ற இடத்தில் வீடு மீது மண் சரிந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், மகன் உட்பட 4 பேர் பரிதாபமாக இறந்தனர். குன்னூர் அச்சனக்கல் என்ற இடத்தில் 7 பேர் மண்ணில் புதைந்து இறந்தனர்.

ஊட்டி கோடப்பமந்து அம்பேத்கர் கொலனியில் தாய், மகன் மற்றும் 6 மாதப் பெண் குழந்தை உட்பட 6 பேர் இறந்தனர்.

நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 2 நாள்களில் மழைக்குப் பலியானோர் எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது. மேலும் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இதுவரை 5 பேர் பலியாகியுள்ளனர். திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர், தேனி மாவட்டங்களில் 5 பேர் பலியாகியுள்ளனர். அதில் தேனி மாவட்டம், உத்தமபாளையத்தில் ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் 12 பேரும், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் 3 பேரும், தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் 6 பேரும், நெல்லை மாவட்டத்தில் 7 பேரும் மழை, இடி சம்பவங்களில் பலியாகியுள்ளனர். தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு வரை 80 பேர் உயிரிழந்துள்ளனர்.

## மகரவிளக்குப் பூசையை முன்னிட்டு சபரிமலையில் 14 ஆயிரம் பொலிஸார்

திருவனந்தபுரம், நவ. 12

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல, மகரவிளக்கு பூசையையொட்டி பாதுகாப்புப் பணியில் 14 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் வரும் 15ஆம் திகதி முதல் மண்டல - மகரவிளக்கு பூசை ஆரம்பமாகிறது. இதனால் இந்தியா முழுவதுமிருந்து லட்சக்கணக்கில் பக்தர்கள் வருகை தருவர். பக்தர்கள் சன்னிதானம் செல்வதற்கு முன்பாக பல அடுக்கு பாதுகாப்பை மேற்கொள்வதற்காக அதிகளவில் பொலிஸாரை ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் தகவல் மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அதிரடிப் படைப் பொலிஸாரைப் பணியில் ஈடுபடுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பக்தர்களுக்கு உதவுவதற்காக தாற்காலிகப் பொலிஸ் நிலையங்கள் ஆங்காங்கே அமைக்கப்படவுள்ளன.

# மதுரை மீனாட்சி கோவிலில் மஹிந்தவின் சகோதரி வழிபாடு

மதுரை, நவ. 12

மதுரை மீனாட்சி அம்மன்கோவிலில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தங்கையும், அவருடைய கணவரும் சுவாமி தரிசனம் செய்தனர்.

கடந்த சில தினங்களாக மஹிந்தவின் தங்கை நிருபமா, அவருடைய கணவர் திருக்குமரன் நடேசன் ஆகியோர் தமிழகத்திலுள்ள புனித தலங்களுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

கடந்த 7 ஆம் திகதி திருச்செந்தூர் முருகன் கோவில் சுவாமி தரிசனம் செய்தனர். கடந்த திங்களன்று இராமேஸ்வரம் கோவிலிலுள்ள 22 புனித தீர்த்தங்களில் புனித நீராடி வழிபட்டனர். பின்னர் அன்று மாலை மதுரை வந்தனர்.

அவர்கள் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போகின்றனர் என அறிவித்திருந்தனர். இதனால் கோவிலிலும், அவர்கள் தங்கிய ஹோட்டலிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பாதுகாப்பு கருதி திருக்குமரன் நடேசன் மட்டும் கடந்த திங்களன்று இரவு ரகசியமாக புதுமண்டபத்திற்கு வந்து, சில பொருட்களை வாங்கிச் சென்றார்.

நேற்றுமுன்தினம் காலை 7.50 மணியளவில் நிருபமாவும், அவருடைய கணவரும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்தனர். அவர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் சன்னதிகளுக்குச் சென்று தரிசனம் செய்தனர்.

அதன்பின்பு திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்குச் சென்றனர். அங்கு அவர்கள் லட்சுமி தீர்த்தத்துக்கு சென்று தலையில் தீர்த்தம் தெளித்துக் கொண்டனர். அங்கிருந்து சன்னதிக்குச் சென்று சுவாமி கும்பிட்டனர். கோவிலில் இடம்பெற்றுள்ள முருகனின் அறுபடை வீடு சித்திரங்களை கண்டு ரசித்தனர். பின்பு நேற்றுமுன்தினம் மாலை திருச்சி புறப்பட்டுச் சென்றனர்.

**இந்தியச் செய்திகள்**

# மழையால் பலியானோர் குடும்பங்களுக்கு அரசு 5 லட்சம் ரூபா வழங்க வேண்டும்

## ஜெயலலிதா வலியுறுத்து

சென்னை, நவ. 12

தமிழகத்தில் பெய்து வரும் கனமழையால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு மாநில அரசு தலா ரூபா 5 லட்சம் வழங்க வேண்டும் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு

கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகள் குறித்து தி.மு.க. அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதாக தெரியவில்லை.

கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக, வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, தேனி மாவட்டம் முழுவதும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஆறுகள் சரியாக தூர்வாரப்படாததால், கூழையாறு, வளவனாறு போன்ற கிளை ஆறுகளில் உடைப்பு ஏற்பட்டு 3 லட்சம் ஏக்கரில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதேபோன்று கடலூர், விழுப்புரம், இராமநாதபுரம் உட்பட பல மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளதோடு, பயிர்கள் அழுகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது எனச் செய்திகள் வருகின்றன. சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் பகுதிகளைச் சேர்ந்த பல கிராமங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன.

மீனவர்கள் கடலுக்குள் செல்ல முடியாமல் வருமானம் இன்றித் தவிக்கிறார்கள். பல இடங்களில் வீதிகள் பழுதடைந்து, போக்குவரத்து அடியோடு துண்டிக்கப்பட்டுள்ளது.

இப்போது விலைவாசி மூன்று மடங்கிற்கு உயர்ந்துள்ள நிலையில், பயிருக்கான இழப்பீடு மற்றும் வெள்ள நிவாரணத் தொகையை மூன்று மடங்கு உயர்த்தி வழங்க வேண்டும். வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூபா 5 லட்சம் வழங்க வேண்டும். இதற்கு முதல்வர் கருணாநிதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

# உலகக் கோப்பை அட்டவணை

மும்பை,வ. 12

2011ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகியவை இணைந்து நடத்தவுள்ள உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்கான கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

உலகக் கோப்பைப் போட்டியில் 14 அணிகள் பங்கேற்கின்றன. இதில் இந்தியா 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இப்பிரிவில் தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கு இந்தியத் தீவுகள், பங்களாதேஷ், அயர்லாந்து, போலந்து ஆகியவை இடம்பெற்றுள்ளன.

'ஏ' பிரிவில் ஆஸ்திரேலியா, பாகிஸ் தான், நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, கனடா, கென்யா ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும்.

இந்தியாவில், இறுதிப் போட்டி, ஒரு அரை இறுதி, ஒரு காலிறுதி உட்பட 29 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஒரு அரை இறுதி, ஒரு கால் இறுதி உட்பட 12 ஆட்டங்கள் இலங்கையிலும், தொடக்க விழா, இரு கால்இறுதி உட்பட 8 ஆட்டங்கள் பங்களாதேஷிலும் நடைபெறும்.

43 நாள்கள் நடைபெறும் போட்டிகள் மொத்தம் 13 மைதானங்களில் நடைபெறவுள்ளன. போட்டிக்கான கால அட்டவணை நேற்றுமுன்தினம் மும்பையில் வெளியிடப்பட்டது.

முதல் போட்டி பெப்ரவரி 19ஆம் திகதி மிர்பூர் நகரில் நடைபெறும். இதில் இந்தியாவும், பங்களாதேஷும் மோதவுள்ளன.

அட்டவணையின் விவரம் வருமாறு -

பெப் 20 : - இலங்கை - கனடா (ஹம்பந்தோட்டை - இலங்கை) கென்யா - நியூசிலாந்து (சென்னை)
பெப்ரவரி 21 : ஆஸி - சிம்பாப்வே (அகமதாபாத்)
22 : இங்கிலாந்து - போலந்து (நாக்பூர்)
23 : கென்யா - பாகிஸ்தான் (ஹம்பாந்தோட்டை)
24 : தென்னாபிரிக்கா - மே.இ. தீவுகள் (டெல்லி)
25 : பங்களாதேஷ் - அயர்லாந்து (மிர்பூர்)
ஆஸ்திரேலியா - நியூசிலாந்து(நாக்பூர்)
26 : பாகிஸ்தான் - இலங்கை (கொழும்பு)
27: இந்தியா - இங்கிலாந்து (கொல்கத்தா)
28 : போலந்து - மே.இ. தீவுகள் (டெல்லி)
28 : கனடா - சிம்பாப்வே (நாக்பூர்)
மார்ச் 1 : கென்யா - இலங்கை (கொழும்பு)
2 : இங்கிலாந்து -அயர்லாந்து (பெங்களூர்)
3 : கனடா - பாகிஸ்தான் (கொழும்பு)
போலந்து - தென்னாபிரிக்கா (மொஹாலி)
4 : பங்களாதேஷ் - மே. இ. தீவுகள் (மிர்பூர்)
நியூசிலாந்து - சிம்பாப்வே (அகமதாபாத்)
5 : ஆஸ்திரேலியா - இலங்கை (கொழும்பு)
6 : இந்தியா - அயர்லாந்து (பெங்களூர்)
இங்கிலாந்து - தென்னாபிரிக்கா (சென்னை)
7 : கனடா - கென்யா (டெல்லி)
8 : நியூசிலாந்து - பாகிஸ்தான் (பல்லிகேலே)
9 : இந்தியா - போலந்து (டெல்லி)
10 : இலங்கை - சிம்பாப்வே (பல்லிகேலே)
11 : பங்களாதேஷ் - இங்கிலாந்து (சிட்டகாங்)
அயர்லாந்து - மே. இ. தீவுகள் (மொஹாலி) *(மிகுதி நாளை)*

# 212 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அபார வெற்றி

சிம்பாப்வேக்கு எதிரான 2 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 212 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றியுள்ளது.

செஞ்சூரியனில் உள்ள சூப்பர் ஸ்போர்ட் பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி, தென்னாபிரிக்காவை துடுப்பெடுத்தாடக் கேட்டுக் கொண்டது.

தொடக்க வீரர்களாக ஸ்மித், கலிஸ் களமிறங்கினர். இதில் ஸ்மித் 53 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். முதல் விக்கெட்டுக்கு களமிறங்கிய டிவில்லியர்ஸ் 5 ஓட்டங்களில் வெளியேறினார். இதையடுத்து ஜே.பி.டுமினி, கலிஸுடன் இணைந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 199 ஆக இருந்த போது, காலிஸ் (81 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். இதன் பின்னர் அதிரடியைத் தொடக்கிய டுமினி இறுதிவரை ஆட்டமிழக்காமல் 87 பந்துகளில் 111 ஓட்டங்கள் குவித்தார். இதனால் தென்னாபிரிக்க அணி நிர்ணயித்த 50 ஓவர்களில் 5 விக்கெட்கள்இழப்புக்கு331ஓட்டங்கள்குவித்தது.

வெற்றி பெற 332 ஓட்டங்கள் தேவை என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய சிம்பாப்வே அணி, தென்னாபிரிக்காவின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் 34.3 ஓவர்களில் 119 ஓட்டங்களுக்குச் சுருண்டது. தைபு அதிகபட்சமாக 52 ஓட்டங் கள் எடுத்தார்.

தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்களில் லாங்வெல்ட், மோர்கெல், வான்டெர் மெர்வ் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர். டுமினி ஆட்டநாயகனாகவும், தைபு தொடர் நாயகனாகவும் அறிவிக்கப்பட்டனர்.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டி இந்திய அணியில் மீண்டும் ஸ்ரீசாந்த்

மும்பை, நவ. 12

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் மீண்டும் இடம்பெற்றிருக்கிறார்.

இலங்கை கிரிக்கெட் அணி ஒன்றரை மாதப் பயணமாக இந்தியா வந்துள்ளது. இங்கு இந்திய அணிக்கு எதிராக 3 டெஸ்ட், இரண்டு 20 ஓவர் கிரிக்கெட், 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள் ளது. இந்தியா - இலங்கை அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 16 ஆம் திகதி அகமதாபாத்தில் தொடங்குகிறது.

இலங்கைக்கு எதிராக முதல் 2 டெஸ்டில் விளையாடும் 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்றுமுன்தினம் மும்பையில் தேர்வு செய்து அறிவிக்கப்பட்டது. எதிர்பார்த்தமை போலவே, தோள்பட்டை காயத்தில் இருந்து குணமாகி பழைய நிலைக்குத் திரும்பி விட்ட வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் மீண்டும் அணியில் இடம்பெற்றுள்ளார். ஆனால் ஆச்சரியப்படும் விதமாக மற்றொரு சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். ஸ்ரீசாந்த் கடைசியாக 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கான்பூரில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் விளையாடி இருந்தார்.

அதன் பின்னர் முதுகில் காயமடைந்த ஸ்ரீசாந்த் காயத்தில் இருந்து மீண்டு உள்ளூர் போட்டிகளில் பங்கேற்றாலும், ஒழுங்கீன நடவடிக்கையால் தேசிய அணியில் இடம் பெறமுடியாமல் போராடினார். சமீபத்தில் இரானி கிரிக்கெட்டின்போது மும்பை வீரர் தாவல் குல்கர்னியை திட்டியமைக்காக அவருக்கு இந்திய கிரிக்கெட் வாரியம் இறுதி எச்சரிக்கை விட்டிருந்தது.

இந்தச் சூழலில் 26 வயதான ஸ்ரீசாந்துக்கு தேர்வாளர்கள் மீண்டும் ஒரு வாய்ப்பு அளித்துள்ளனர்.

தற்போது ஆஸ்திரேலிய ஒரு நாள் தொடரில் விளையாடி வரும் வேகப்பந்து வீச்சாளர்கள் ஆஷிஷ் நெஹ்ரா, முனாப் பட்டேல் நீக்கப்பட்டிருக்கிறார்கள். 2 ஆவது விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக்குக்கும் இடம் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் கார்க்குண்டுத் தாக்குதல்: 35 பேர் பலி; நூறுக்கு மேற்பட்டோர் காயம்



இஸ்லாமாபாத், நவ. 12

வடமேற்கு பாகிஸ்தான் நகரான சார்சடாவில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரக் கார்க்குண்டுத் தாக்குதலில் 35 பேர் பலியாயினர். நூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பல கடைகள் தீக்கிரையாகிவிட்டன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தைப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரொன்றுக்குளிருந்து குண்டுகள் வெடித்தன. இக்காருக்குள் ஏறத்தாழ 40 கிலோ எடையுள்ள வெடிபொருள்கள் இருந்திருக்கலாம். இதுவரை இக் குண்டுத்தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் உரிமை கோரவில்லை என்றும் இவ்வட்டாரம் குறிப்பிட்டது.

''பயங்கர ஓசையுடன் குண்டு வெடித்தது. இதையடுத்து, தீச்சுவாலைகளுடன் கூடிய கடும் புகை மண்டலங்கள் எழுந்தன. குண்டுவெடிப்பின் தாக்கத்தால் அக்கம் பக்கமிருந்த கடைகள் சேதமடைந்தன. சில கடைகளில் தீ பற்றிக்கொண்டது'' என நேரிற் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

''குண்டு வெடித்ததும் அக்கார் அலக்காக வீதியோரமிருந்த பழக்கடைகளுக்கு மேலாக தூக்கி வீசப்பட்டது. இதனால் பழக்கடைகளின் கூரை ரெட்டுகள் கிழிந்துவிட்டன. அத்துடன், தீயும் பற்றிக் கொண்டது'' என நேரில் கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

''குண்டு வெடித்ததையடுத்து அப்பகுதியில் மனித அவயங்கள் சிதறிக் கிடந்தன. பாதணிகளும், கொள்வனவு செய்த பொருள்களும், உறைகளும் அப்பகுதியில் சிதறிக்கிடந்தன. தள்ளுவண்டிகள் உடைந்தும் நெளிந்தும் கிடந்தன. காயமடைந்தவர்கள் குருதி வெள்ளத்தில் கிடந்தார்கள்'' என்றும் அவர்கள் கள நிலவரத்தை விவரித்தார்கள்.

# பாக். அணுவாயுதங்களைக் கைப்பற்றும் எண்ணம் அமெரிக்காவுக்குக் கிடையாது

## வெளியுறவுத்துறை அதிகாரி தெரிவிப்பு

வாஷிங்ரன், நவ. 12

பாகிஸ்தானிலுள்ள அணுகுண்டுகள், அணு ஆயுதத் திட்டங்கள், அணு ஆயுதங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றும் எண்ணம் எதுவும் தனக்குக் கிடையாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பாகிஸ்தான் உளவுத்துறையினதும் (ஐ.எஸ்.ஐ.), இராணுவத்தினதும் ஆதரவு தீவிரவாதிகளுக்கு உண்டு எனக் கூறப்படுகிறது.

எனவே, அந்நாட்டிலிருக்கும் அணுகுண்டுகள், அணு ஆயுதங்கள் ஆகியவை அனைத்தும் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கும் ஆபத்துள்ளது. இது குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளர் செய்மவுர் என்பவர் சமீபத்தில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

அதில் அவர், ''ஒபாமா அரசிலுள்ள உயர் அதிகாரிகளுக்கும், பாகிஸ்தான் இராணுவத்துக்குமிடையே ஓர் இரகசியப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதன்படி பாகிஸ்தானிலுள்ள அணுகுண்டு பாதுகாப்புக்கு நன்கு பயிற்சி பெற்ற அமெரிக்கப் படையினரும் கூடுதலாக ஈடுபடவுள்ளனர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''அமெரிக்க அரசில் பணியாற்றும் அதிகாரிகள், சமீபத்தில் ஓய்வுபெற்ற அதிகாரிகள் ஆகியோரை பேட்டி கண்டேன். அப்போது இந்தத் தகவல் கிடைத்தது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தத் தகவல்களை அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் இயான் கெல்லி மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

''பாகிஸ்தானிலுள்ள அணு ஆயுதங்கள், அணு கருவிகள் ஆகியவற்றைக் கைப்பற்றும் எண்ணம் எதுவும் அமெரிக்காவிடம் கிடையாது. பாகிஸ்தானில் அமைதி நிலவ பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை இவ்விரு நாடுகளும் இணைந்து மேற்கொண்டுள்ளன. அதற்காக இரண்டு நாடுகளும் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றன. அதன்பொருட்டு, பாகிஸ்தானுக்கு நிதி உதவியும் வழங்கப்படுகிறது.

''பாகிஸ்தானிலுள்ள அணு ஆயுதத் திட்டங்கள், அணு குண்டுகள், கருவிகள் ஆகியவற்றுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கும் திறமை, அந்நாட்டுக்குள்ளது என அமெரிக்கா நம்புகிறது. இதை வெளியுறவுத்துறை அமைச்சரும் தெரிவித்திருக்கிறார். பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தேவையான ஏராளமான பாதுகாப்பு உதவிகளையும் அமெரிக்கா வழங்கி வருகிறது.'' இவ்வாறு இயான் கெல்லி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆசிய நாடுகளுக்கான விஜயம் ஆரம்பம்

வாஷிங்ரன், நவ. 12

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது. பராக் ஒபாமா இன்று அமெரிக்காவிலிருந்து அலாஸ்கா வழியாக சிங்கப்பூர் பயணத்தை மேற்கொள்கிறார்.

சிங்கப்பூரில் நடைபெறும் ஆசிய - பசுபிக் பொருளாதார மாநாட்டில் பராக் ஒபாமா பங்கேற்பார். இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ், சிங்கப்பூர் பிரதமர் லீ செய்ன் லூங், இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பம்பாங் ஆகியோரையும் தனித்தனியாக சந்தித்துப் பேசுவார்.

பராக் ஒபாமா எதிர்வரும் 16 ஆம் திகதி ஜப்பானிய விஜயத்தை மேற்கொண்டு அதன் தலைநகரான டோக்கியோவை சென்றடைவார். அங்கு ஜப்பானியப் பிரதமர் யுகியோ ஹடாயோமாவைச் சந்தித்துப் பேசுவார்.

இதையடுத்து, மறுதினமான 17 ஆம் திகதி ஒபாமா சீன விஜயத்தை மேற்கொள்வார். அவர் சீன அதிபர் ஹூ ஜிந்தாவோ, பிரதமர் வென் ஜியாவோ ஆகியோரை சந்தித்துப் பேசுவார். எதிர்வரும் 19 ஆம் திகதி ஒபாமா தென்கொரிய விஜயத்தை மேற்கொள்வார். மறுதின மான 20 ஆம் திகதி அவர் அமெரிக்கா திரும்புவார்.

## தீவகம் தெற்கு பிரதேச சபை, வேலணை

### மீன்சந்தைகள், ஆட்டிறைச்சிக்கடைகள், மாட்டிறைச்சிக்கடைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் 2010

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், ஆட்டிறைச்சிக்கடை, இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2010ஆம் திகதி முதல் 31.12.2010ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் : ரூபா 1,000.00 (வற் வரி நீங்கலாக)
கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி: 12.11.2009
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்: 25.11.2009 முற்பகல் 10 மணிவரை
கேள்வி திறத்தல்: 25.11.2009 பிற்பகல் 01 மணிக்கு

| இல | குத்தகை விவரம் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக்கூடியது | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தை | 3,750.00 | 1,000.00 | 75,000.00 |
| 02 | வேலணை துறையூர் மீன்சந்தை | 5,500.00 | 1,000.00 | 110,000.00 |
| 03 | வேலணை அம்பிகைநகர் மீன்சந்தை | 1,250.00 | 1,000.00 | 25,000.00 |
| 04 | வேலணை செட்டிப்புலம் மீன்சந்தை | 1,500.00 | 1,000.00 | 30,000.00 |
| 05 | நயினாதீவு தெற்கு மீன்சந்தை | 1,250.00 | 1,000.00 | 25,000.00 |
| 06 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை | 1250.00 | 1,000.00 | 25,000.00 |
| 07 | அல்லைப்பிட்டி மீன்சந்தை | 1,000.00 | 1,000.00 | 12,000.00 |
| 08 | மண்டைதீவு மீன்சந்தை | 1,000.00 | 1,000.00 | 10,000.00 |
| 09 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக் கடை | 10,000.00 | 1,000.00 | 200,000.00 |
| 10 | வேலணை மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 100,000.00 |
| 11 | அல்லைப்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 1,000.00 | 100,000.00 |
| 12 | வேலணை ஆட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 1,000.00 | 25,000.00 |

குறிப்பு:-

* கேள்விப்பத்திரங்கள் கோருபவர் ஆள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் கொண்டுவரல் வேண்டும்.
* கேள்விப்பத்திரம், கேள்வித்தொகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர் வரி 12% (வற்வரி) மேலதிகமாக செலுத்தப்படல் வேண்டும்.
* சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை 2010 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.
* புங்குடுதீவு மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டுவரும் மீன்களுக்கு சந்தைவரி தவிர்த்தே அறவிடப்பட வேண்டும்.
* வேலணை மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக்கடைகளை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு மீன்சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவரே கடையையும் நிலத்தையும் சுயமாக அமைத்துக் கொள்ளவேண்டும்.
* சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வேலணை பிரதேச சபை செயலாளராகிய எனக்கு இருக்கிறது.
* கேள்விப் படிவங்கள் பெறுபவர்கள் முன்பு வேலணை பிரதேச சபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது. மேலும்மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் வேலணை பிரதேச சபையின் வருமானவரி பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ம.வசந்தகுமார்
செயலாளர்,
தீவகம் தெற்கு பிரதேச சபை, வேலணை.
(ஐ/562260)

B.O.C Travels (PVT) LTD
SUBSIDIARY BANK OF CEYLON

இலங்கை வங்கியின் மற்றுமொரு அபூர்வமான சேவையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

B.O.C Travels (PVT) LTD



யசர்வதேச விமானச்சீட்டு விற்பனையும் முன்கூட்டிய பதிவுகளும்
யஇந்தியாவுக்கான யாத்திரை ஒழுங்குகள்
யசர்வதேச, உள்ளூர் ஹோட்டல்களுக்கான முன்பதிவுகள்
யஉல்லாசப் பயணத்துக்கான ஏற்பாடுகள்
யவிசா, பாஸ்போட் ஒழுங்குகள்
யபயணக் காப்புறுதி
யஇன்னும் அதிக சேவைகள்

மகிழ்ச்சிகரமான திறப்பு விழாவுக்கு உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

காலம் : 12.11.2009 வியாழக்கிழமை

இடம் : யாழ்ப்பாண இலங்கை வங்கி மேற்தரக்கிளை மேல்மாடி.

B.O.C Travels (PVT) LTD

Subsidiary Bank of Ceylon, Hospital Road, Jaffna.
Phone: 021 2224575, Fax: 021 2224576. www.boctravels.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய ரீதியில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மைலோ சம்பியன் கிண்ணத்தை வென்ற மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியினர் வெற்றிக்களிப்போடு வீதிகளில் வலம்வருவதையும் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மானிப்பாய் இந்து உதைபந்தாட்ட அணியினருக்கு உற்சாக வரவேற்பு

யாழ்ப்பாணம், நவ.12

மானிப்பாய் இந்துக்கல்லூரி 19வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணியினருக்கு பெரும் வரவேற்பு நிகழ்வு மானிப்பாயில் நேற்று இடம்பெற்றது. கொழும்பில் இடம்பெற்ற 'மைலோ' வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் பிரிவு மூன்றில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கொழும்பில் இருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் திரும்பிய மானிப்பாய் இந்துக்கல்லூரி உதைபந்தாட்ட அணியினரை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்குச் சென்ற பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்படப் பெருந்திரளானோர் வரவேற்று ஊர்வலமாக மானிப்பாய் வீதி வழியாக அழைத்துவந்தார்கள்.

அத்துடன் அவர்களை பிரதேச சபை மண்டபத்தில் குழுமிநின்ற மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் வெடி கொளுத்திப் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து பாண்ட் வாத்திய இசை முழங்க கல்லூரி வளாகத்திற்கு உதைபந்தாட்ட அணியினர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அதிபர் சி.சிவனேசன் தலைமையில் இடம்பெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பழைய மாணவர் சங்க செயலாளர் உதயசூரியன், வலிகாமவலயஉடற்கல்விப் பணிப்பாளர்மு.நடராசா உட்படப் பலர் உரையாற்றினர். (04-86)

# ஏ-9 வீதியூடான இ.போ.ச. பஸ் சேவையை அமைச்சர் டக்ளஸ் நேற்று ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்.குடாநாட்டிலிருந்து ஏ-9 வீதியூடான இ.போ.ச. பேருந்துகள் பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.காமினி மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று இந்தப் போக்குவரத்துச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர், இ.போ.ச. யாழ்.பிராந்திய முகாமையாளர், பாதுகாப்புத் தரப்பு உயரதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அதேநேரம் இப்போக்குவரத்து சேவையினூடாக பயணிக்கும் பொதுமக்கள் முறிகண்டிப் பிள்ளையார் கோயிலில் தரித்து, வணக்க வழிபாடுகளில் ஈடுபடவும் இதர இயற்கை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## கண்ணீர் அஞ்சலி



வலி.கிழக்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் திருமதி ஜானகி கணேசலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பொன்மலர் தர்மலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**

(90891)

## 6ஆம் மாத நினைவலைகள்



### கந்தசாமி தர்மகுலசிங்கம்

(நிர்வாக அதிகாரி, முல்லைத்தீவு வைத்திய பணிமனை)

தோற்றம் 02.11.1948 — மறைவு 12.05.2009

மாதங்கள் ஆறு ஆனாலும்
ஆறவில்லை எம் மனங்கள்

வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (90894)

தகவல்:
க.மனோகரன் (தம்பி)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### வேலுப்பிள்ளை சண்முகலிங்கம்

(பிரபல புகையிலை வியாபாரி)

பிறப்பு 22.08.1928 — இறப்பு 05.11.2007

திதி : தசமி

உள்ளத்தால் உயர்ந்தவனாக
வாழ்விற்கு வழிகாட்டியாக
திகழ்ந்த எம் ஐயாவே!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
வேண்டுகின்றோம்
இறைவனிடம்.

சேச் லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
T.P : 0778307651 (90885)

மனைவி,
பிள்ளைகள்.

# யாழ்.வலய அதிபர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.நவ.12

யாழ்.வலய முதலாம் - 'ஏ'. 'பி' தர, முதலாம் 'சீ' தர இரண்டாம் நிலைத்தர பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கலந்துரையாடலில் குறிப்பிட்ட வகைப் பாடசாலை அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (-10)

# யாழ்.மாநகர சபைக்கு 3 ஆயிரம் விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்.மாநகரசபையில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு இதுவரை 3 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பங்கள் மூலம் 50 வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-111)

**காணவில்லை:** கடந்த 09.11.2009 தொடக்கம் இரண்டு பசுமாடுகளை காணவில்லை ஒன்று கறுப்பு மற்றது மாவெள்ளை (ஒரு கொம்பு உடைந்தது) கண்டவர்கள். 0215100 160 என்னும் தொலைபேசியூடாக அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையைநான் அடையவழிகாட்டும்பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத் தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

(சி/562254) அடியாள்.

# இடம்பெயர்ந்து வந்தவர்கள் வாக்களிப்பதற்கான வசதிகள்

யாழ்ப்பாணம், நவ.12.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்து வசிக்கும் வாக்காளர்கள் எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிக்க வசதியாக தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் தாங்கள் வசிக்கும் கிராம அலுவலர்கள் ஊடாகப் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் இவ் வசதியினைப் பெறமுடியும் எனத் தேர்தல் திணைக்கள யாழ்.அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

எனவே இடம்பெயர்ந்த வாக்காளர்கள் 2008 ஆம் ஆண்டிற்கான தேர்தல் மாவட்டம் (தாங்கள் முன்பு வசித்த மாவட்டம்), வாக்கெடுப்புப்பிரிவு போன்ற விவரங்களைத் தாங்கள் தற்போது இடம்பெயர்ந்து வசிக்கும் கிராம அலுவலர்களிடம் வழங்கி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-10)

# வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.12

மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 6ஆம் 7 ஆம் வகுப்புக்களுக்கு நடைபெறும் இந்த நிகழ்வில், பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொள்வார். (204)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சிவானந்தன்



(ஓய்வுபெற்ற உதவிப் பொறியியலாளர்,
- Sri Lanka Telecom, இரத்மலானை)

84, பலாலி வீதி, கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும் ஆமர் வீதி, கொழும்பினை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவானந்தன் கடந்த (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர் வைத்திலிங்கம் (முன்னாள் உப அதிபர் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)-அமரர் பாக்கியலட்சுமி தம்பதியரின் இளைய மகனும் அமரர் வேலுப்பிள்ளை - மகேஸ்வரி (கனடா) தம்பதியினரின் அன்பு மருமகனும், சித்திராவின் (ஆசிரியை, கொ/சென்.ஆன்ஸ் பாலிகா மகா வித்தியாலயம்) பாசமிகு கணவரும், யோகானந்தின் (A/L 2007 Bio யா/இந்துக் கல்லூரி) பாசமிகு தந்தையும் சிவபாக்கியம், Prof. அருள்நந்தி, (விவசாய பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்)ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவன்தாசன் (ஓய்வு பெற்ற கணக்காளர், தபால் திணைக்களம்), தவமணிதேவி (பிரதம நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம்), உமா சரவணமுத்து (கரவெட்டி), பாமாசோமசுந்தரம் (சுவிஸ்), அம்பிகா குலசிங்கம் ((முன்னாள் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்., தற்போது நியூசிலாந்து), சித்கணேசன் (சுசிலா - கனடா), மல்லிகா வசந்தகுமார் (கனடா), சிவபாலன் (பிருந்தா-கனடா), தேவிகா காண்டீபன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், சாம்பவி, அகிலன், மாதினி, சுகன்யா, கீர்த்திகன், கலாதன், கபிலன், ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், நிலுசன், கோகிதன், தர்சினி, ஐங்கரன், ஜனனி, அம்பிகா, ஸ்வேதன் ஆகியோரின் பெரியப்பாவும், திவ்வியன், மாதுரி, அபிஷன், சரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை கந்தர்மடத்திலுள்ள அவரது பிறந்த இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

84, பலாலி வீதி,
கந்தர்மடம்.
(021 222 3964) (90890)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஞானப்பிரகாசம் பத்திநாதர்



(இளைப்பாறிய அதிபர்)

அலுக்கை, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் பத்திநாதர் நேற்று (11.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் (14.11.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து அளவெட்டி புனித சூசையப்பர் சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அலுக்கை, அளவெட்டி.
0213217099 (90960)

தகவல்:
குடும்பத்தினர்

### முத்தையா பரஞ்சோதி

உரும்பிராய் V.T.S தெற்கு ஒழுங்கையைச் சேர்ந்த முத்தையா பரஞ்சோதி (பண்டா, உரும்பிராய்ச் சந்தை- மரக்கறி வியாபாரி) நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா-சுந்தரம் தம்பதியினரின் மகனும், ரதிதேவியின் சகோதரரும் காலஞ்சென்ற சத்தியலிங்கத்தின் மைத்துனரும், லதீனனின் (Sierra Telecom) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2009) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுதுச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.T.S ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். தொ.பே 021 222 2018

தகவல்:
ரதிதேவி (சகோதரி)
லதீனன் (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சேவை 2.II வகுப்புக்குப் பதவி உயர்வு; நியமனக் கடிதங்களைப் பெற கொழும்பு செல்லமுடியாத நிலை

அச்சுவேலி, நவ. 12

இலங்கை அதிபர் சேவை 2:II பதவி உயர்வு பெற்றவர்களில் 490 பேருக்கு பதவிஉயர்வைச் சீர்செய்வதற்கான ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்கு கொழும்பில் உள்ள கல்வி அமைச்சுக்கு வருமாறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இக்கடிதங்கள் தனிச் சிங்களத்திலேயே எழுதப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2:II பதவி உயர்வில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்பிரகாரம் 155 புள்ளிக்கும் அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் எழுத்து பரீட்சையில் பெற்றவர்களையே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கவேண்டும் என்பதன் பிரகாரம் 464 பேர் பதவி உயர்வு பெறும் சந்தர்ப்பத்தை இழந்தனர். வெட்டுப் புள்ளியாக 229 கணிக்கப்பட்டதன் பிரகாரம் 26 பேர் பதவிஉயர்வுபெறும் சந்தர்ப்பத்தை இழந்தனர்.

இந்த வகையில் 490 பேர் புதிதாக பதவி உயர்வு பெறுவதால் அவர்களின் ஏழு ஆவணங்களை நாளை (13 ஆம் திகதி) பரிசீலனை செய்து பதவி உயர்வுக் கடிதங்களை வழங்குவதற்குக் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, ஆசிரியர் நியமனக் கடிதம், ஆசிரியராகப் பதவியேற்ற சம்பளத் திரட்டுப் பிரதி, பதவியை உறுதிப்படுத்திய கடிதம், ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளடக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வலயக் கல்விப் பணிப்பாளரின் கடிதம் - கணக்காய்வில் எந்தவிதமான நிதிமோசடிக்கும் உள்ளாக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வலயக் கல்விப்பணிப்பாளரின் கடிதம் -

தற்பொழுது சேவையாற்றும் பாடசாலை அதிபரின் நற்சான்றுப்பத்திரம்.

இந்த ஏழு ஆவணங்களையும் பரிசீலனை செய்து பதவி உயர்வுக் கடிதங்களை வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சுக்கு வருமாறு அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள மொழியில் இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதால் இதில் குறிப்பிடப்பட்டிருப்பதை விளங்கிக் கொள்வதற்கு தமிழ் ஆசியர்கள் சிரமப்பட்டுத் திண்டாடுவதோடு 13 ஆம் திகதி உரிய நேரத்துக்குக் கொழும்பு செல்வதும் கஷ்டமாக இருப்பதாகக் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

சம்பந்தப்பட்டவர்கள் உரிய நேரத்துக்கு கொழும்புக்கு சமுகம் தரவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு பதவி உயர்வு கிடைக்காமல் போய்விடும் என்பது யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தமட்டில் நடைமுறைக்குச் சாத்தியமில்லை. அதனால் தகுதி பெற்றவர்களுக்கு நிச்சயமாகப் பதவி உயர்வு கிடைக்கும்.

சம்பந்தப்பட்டவர்கள் உரியமுறையில் அழைப்புக்கடிதங்கள் கிடைத்தபின்னர் கொழும்புக்கு வந்து சேரலாம். குறிப்பிட்ட எண்ணிக்கையினர் யாழ்.மாவட்டத்தில் இருந்தால் அவர்களுக்கான சான்றிதழ் பரிசீலனையை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளுவது தொடர்பாகச் சாதகமான முறையில் பரிசீலனை செய்யலாம் - என்று தெரிவித்தார். (அ-11)

## பிரயாணத்திற்கான வரையறுக்கப்பட்ட நிறுவனம் இலங்கை வங்கியினரால் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

இலங்கை வங்கியின் பிரயாணத்திற்கான வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை மேல்மாடியில் இந்த நிறுவனம் திறக்கப்படவுள்ளது.

இதன்மூலம் சர்வதேச விமானச் சீட்டுக்கள், இந்தியாவிற்கான யாத்திரை ஒழுங்குகள், சர்வதேச, உள்ளூர் விடுதிகளிற்கான பதிவுகள், விசா, பாஸ்போட் ஒழுங்குகள், பயணக்காப்புறுதி போன்ற பல சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். (1-10)

## சாவகச்சேரி, கரவெட்டி வைத்தியசாலைகளில் புதிய கட்டடங்கள் நாளை மறுதினம் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று கட்டடங்களும் கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள வெளிநோயாளர் பிரிவுக் கட்டடமும் நாளை மறுதினம் சனிக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நெக்கொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு கட்டடமும் வடமாகாண சுகாதார அமைச்சின் பி.எஸ்.டி.ஜி. நிதி மூலம் கட்டப்பட்ட புதிய மருந்துக் களஞ்சியமும் அவுஸ்திரேலிய மருத்துவக்கழகத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட பெண்கள் விடுதியும் நாளை மறுதினம் காலை 8 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடக்குமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, 'நெக்கொட்' திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

வட மாகாண சுகாதார அமைச்சின் பி.எஸ்.டி.ஜி. நிதி மூலம் கட்டப்பட்ட கரவெட்டி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கட்டடம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 11 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்வர். (1-20)

## முகாம்களில் இருந்த பல்கலை மாணவர்களிற்கு லண்டன் ஆலயத்தினர் நிதியுதவி

யாழ்ப்பாணம், நவ. 12

அகதிமுகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.பல்கலைக் கழகத்தில் கல்வியைத் தொடர்ந்துவரும் மாணவர்களிற்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் லண்டன் கனகதுர்க்கை அம்பாள் ஆலய சபையினர் நிதியுதவி வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

வாழ்க்கை நிலைப்படுத்தலுக்கான இந்தக் கொடுப்பனவு இதுவரை பல்கலைக் கழகத்திற்கு அகதிமுகாம்களில் இருந்து வருகைதந்து பதிவை மேற்கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

நிதியுதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் யாழ்.பல்கலைக்கழக நலச்சேவை அலுவலகத்திலும் பல்கலைக்கழக விடுதிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் நிதியுதவி பெறுகின்ற மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (10)

## இந்தோனேஷியக் கப்பலில் உள்ளவர்களை பிலிப்பைன்ஸுக்கு அனுப்ப அரசு திட்டம்

கொழும்பு, நவ. 12

இந்தோனேஷியக் கடற்பரப்பில் தடுக்கப்பட்டுள்ள கப்பலில் தங்கியுள்ள78 இலங்கையர்களைப் பிலிப்பைன்ஸ் இடைத்தங்கல் முகாமுக்கு கொண்டு செல்வது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசு கவனம் செலுத்தியுள்ளது.இவர்களைப் பிலிப்பைன்ஸுக்கோ அல்லது நாத்தா தீவுக்கோ அழைத்துச் செல்வது தொடர்பில் ஆஸ்திரேலிய அரசு கலந்துரையாடி வருகிறது என 'த ஆஸ்திரேலியன்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, 'ஓஸியானா வைகிங்' என்ற இந்தக் கப்பல் இந்தோனேஷியக் கடலில் தரித்து நிற்பதற்கான கால எல்லை நாளையுடன் முடிவடைகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் கப்பலிலுள்ள 78 பேரில் 8 பேர் இந்தோனேஷியாவில் தரையிறங்கச் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் கூறியதாகத் தகவல்கள் தெரிவித்தன. (அ-சி)

## இலங்கைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய எல்லை காவற் படையின் 'வரஹா' மற்றும் 'சி.ஜி.எஸ். விக்ரஹா' என்ற இரு போர்க் கப்பல்களைப் புதுடில்லி 2007 இல் வருடாந்தம் புதுப்பிக்கப்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கியிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகிக் கொண்டிருந்த இலங்கைக்கு ஹெலிக்கொப்டர்கள், நவீன பீரங்கிகள் பொருத்தப்பட்ட இக்கப்பல்களை இந்தியா வழங்கியது.

எனினும், தற்போது அந்தக் கப்பல்களை மீள ஒப்படைக்குமாறு இந்திய எல்லைக் காவற்படையினர் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இலங்கைக் கடற்படையினர் பதிலளிக்கவில்லை. அத்துடன் குறிப்பிட்ட இரு யுத்தக்கப்பல்களுக்கும் 'சாகாரா' மற்றும் 'சயுரலா' எனப் புதிய பெயர்கள் சூட்டியுள்ளனர்.

இரு யுத்தக் கப்பல்களையும் வழங்கியதற்காகத் தாம் இந்தியாவுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளனர் என இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்துள்ளார்.

இந்திய எல்லைக் காவற் படையினை அரவணைப்தற்காக இராஜதந்திர உறவுகளைச் சீர்குலைப்பது இந்திய அரசுக்குக் கடினமாக விளங்கலாம்.

அதேவேளை, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மேலும் காலூன்றுவதையும் இந்தியா விரும்பாது. இந்த இரு நாடுகளும் ஏற்கனவே பெருமளவு ஆயுதங்களை வழங்கியுள்ளன.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கைக் கடற்படைக்கு யுத்தக் கப்பல்கள் அவசியமில்லை என இந்திய எல்லைக் காவற்படையினர் கருதுகின்றனர் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினருக்கு வழங்கப்பட்ட யுத்தக்கப்பல்களுக்குப் பதிலாக புதிய கப்பல்களை இந்தியா தனது எல்லைக் காவற்படை க்கு வழங்கலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## அத்தியாவசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசௌகரியமும் பொதுமக்களுக்கு ஏற்படாத வகையில் பாதுகாப்புப் படையினர் பார்த்துக் கொள்வார்கள் என்றும் இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

## மேல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தகவல் கிடைத்துள்ளது- என்று ஐக்கியதேசியக்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க நேற்று புதன்கிழமை மாலை ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட, நீர்கொழும்பு, மாபோல, மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களிலேயே பாதுகாப்புத் தலைமை அதி காரி சரத்பொன்சேகாவின் படங்கள் அடங்கிய பந்தல்கள் கட்டப்பட்டிருந்தன.

## துறைமுக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் குதித்தனர். இதனால் நேற்றுத் தலைநகர் கொழும்பிலும் பிற இடங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன.

எனினும், எரிபொருள் விநியோகம் எந்தத் தடங்கலும் இல்லாமல் சீராக இடம்பெறுகின்றது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அரசினால் தமக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட 22 வீத சம்பள உயர்வை நிராகரித்துத் தாமும் தற்போது சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தமது தொழிற்சங்கமும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## பல்கலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தின் கலைப்பீடம், வர்த்தகபீடம் ஆகியன காலவரையறையின்றி- மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்படி கோஷ்டி மோதலில் வெளிநபர் ஒருவர் மற்றும் 10 மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள்.

அவர்களில் இருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாணவர்கள் பல்கலைக்கழக விடுதிகளை விட்டு உடனடியாக வெளியேறிச் செல்ல வேண்டுமென்றும் பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.


பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம்

A/L இரசாயனவியல்

BY : J.J கொலின்ஸ்

தொடர்புகளுக்கு : பிறைற் ஒக்சன் சென்ரர் இலக்கம் 275, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

T.P - 0213735549

(90872)

காணி விற்பனைக்கு

36/4, இராமநாதன் வீதி, கலைவாணி சனசமூக நிலைய ஒழுங்கையில் அமைந்துள்ள 1 1/4 பரப்பு காணியுடன் கிணறும் விற்பனைக் குண்டு.

தொடர்பு: திருமதி.பாலசுந்தரம் கருணாவதி (கருணா) (90798)

G.A.Q பேராதனை

G.A.Q 1st Com. பரீட்சை

புதிய பிரிவுகள் ஆரம்பம் 14.11.2009

எமது ஆசிரியர் குழு

Tam. N. சத்தியவேந்தன்
Hin. K.S ரமணன்
Phl. S.S மனோகரன்
Pol.sc N. றஜிதா
Geo. S.P. கரன்

பதிவுகள் யாவும் எம் நிறுவனம் மூலம் நடைபெறும்.

விபரங்களுக்கு : நிர்வாகி

நி.பூபாலசிங்கம்

BEACON கல்வி நிலையம்

மணிகூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் 04.11.2009 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களான



செல்வி.நாளினி சண்முகசுந்தரம் (HNDE)



திரு.பாலசுந்தரம் பாலமுரளி (HNDM)

ஆகிய இருவரையும் பாராட்டுவதுடன் மேலும் அவர்கள் பல பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(90887)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org